102

சிவாஜி

வடக்கே ராஜபுத்திரர்கள் வீழ்ச்சி அடைந்து மொகலாய சக்கரவர்த்திக்குக் கீழ் குறுநில மன்னர்களாயிருந்த சந்தர்ப்பம்; மொகலாய அரசரின் சேனாதிபதிகளாகவும், பந்துக்களாகவும் பலர் இருந்தார்கள்; சிலர் மகம்மதியர்களாகவே மதமாறினார்கள். தெற்கே விஜயநகர ஸாம்ராஜ்யம் மகம்மதிய கோபாவேசத்தால் தவிடு பொடியாகிவிட்டது. நாடெங்கும் மொகலாய சாம்ராஜ்ய பிரதிநிதிகளும், சுல்தான்களும் ஆண்டார்கள். முன் சென்ற மொகலாயர்கள் மதத்தை அவ்வளவாகப் பாராட்ட வில்லை. ஆனால் அந்த சாம்ராஜ்யத்தின் உன்னத காலத்தில் தோன்றின அவுரங்கஜேப் மகம்மதிய மதத்தை ராஜமதமாக்கி ஹிந்துக் களுக்கு ஜஸியா என்ற வரியை விதித்தார்.

நாடெங்கும் ஹிந்துக்களிடையே ஏக்கம் பரவிற்று; மதாசாரியார் களும் பக்தர்களும் ராஜாங்க ஆதரவின்றி மதவுணர்ச்சியை நிலைநிறுத்த முடியாமல் தவித்தார்கள். வடக்கே கிருஷ்ண சைதன்யர் முதலானவர் களும், தெற்கே ஆழ்வார்களும் சைவசமய நாயன்மார்களும் பக்தியை போதித்தார்கள். மேற்கேயும் புரந்தர தாஸ், ராமதாஸ் முதலானவர்கள் தோன்றினார்கள். அரசர்களின் ஆதரவின்றி கலங்கினார்கள்.

பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாடு இப்படி நலிந்து கிடந்தது.

மகாராஷ்டிர தேசத்தில் பூனா நகரத்தில், முக்தாநதிக்கரையில், ராஜமகல் என்ற அழகிய மாளிகையில், நதியை நோக்கிய விசாலமான உப்பரிகையில் ஷாஜி பான்ஸலேயின் மனைவி ஜீஜாபாயியும் அவள் மகன் இளம் சிவாஜியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஜீஜாபாயி தவமும் தேஜஸும் நிறைந்த முகத்துடன் மகன் முகத்தைப் பார்த்துக் கொண்டே பேசினாள்.

சிவாஜி கம்பீரமும் கவர்ச்சியும்கொண்ட முகத்தைத் தூக்கித் தாய் வாயிலிருந்து வந்த வார்த்தைகளை உள்ளத்தில் பதித்துக் கொண்டிருந்தான்.

கிராம ஊழியன், 15.08.1943 – 16.03.1944

'ராமன் காட்டுக்குப் போன கதையை மற்றொருதரம் சொல்லம்மா?' என்று பையன் தாயாரை ஆவலுடன் கேட்டான்.

'அதில் என்ன உனக்கு அவ்வளவு பிரியம், குழந்தாய்?'

'கிஷ்கிந்தையிலும் இலங்கையிலும் இருந்த அதர்மத்தை அகற்ற அவர் பதினான்கு வருஷம் கஷ்டப் பட்ட கதை வெகு மனோகரமா யிருக்கிறது.

'அதற்குப்பின் நடந்த கதை – பட்டாபிஷேகத்தின் பிறகு – அது இன்னும் கவர்ச்சியுடையது. நம்முடைய கதைபோன்றது, கண்ணே!' என்றாள் தாய்.

'எப்படி அம்மா?' என்று சிவாஜி ஆவலுடன் கேட்டான்.

'ராமசந்திரன் சீதையை வால்மீகி ஆசிரமத்திற்கு அனுப்பிவிட்டார். அவள் அங்கே குழந்தைகளுடன் தனியாக இருந்தாள். அதே போல–' என்று ஜீஜாபாயி இழுத்தாள்.

'அதே போல?'

'தெரியவில்லையா? நீயும் நானும் இங்கே புனாவில் தாதாஜி கன்ஹதேவ் என்ற வால்மீகியின் பாதுகாப்பில் இருக்கிறோம். அது நம்முடைய ராமசந்திரன் கட்டளை!'

சிவாஜி மௌனமாகத் தாயார் முகத்தைப் பார்த்தான். ஜீஜாபாய் கண்கள் கலங்கின.

'ஆனால், சிவாஜி, சீதையைப்போலவே எனக்கும் இப்பொழுது ஒரு குறையும் இல்லை. தகப்பனுக்கேற்ற பிள்ளையாக நீ வளர்ந்துவிட்டாய். அதற்காகத்தான் நான் உயிர் வாழ்ந்தேன். உன்னைப்பார்த்துக்கொண்டு தான் என் நாட்கள் கழியும்' என்று அவள் மெதுவாகச் சொன்னாள்.

'நீ சொல்லும் இதிகாசக் கதைகள் காட்டுகிறபடி எல்லாம் நல்லத் திற்குத்தான், அம்மா! இங்கே நான் தனியாக உன்னுடனும் தாதாஜி யுடனும் இல்லாவிட்டால் யார் எனக்கு இவ்வளவு அறிவு ஊட்டப் போகிறார்கள்?'

'தாதாஜி உண்மையாகவே உனக்கு வித்தையைக் கற்றுக் கொடுக் கிறார். அஸ்திர சஸ்திரங்களில் பயிற்சி அளிக்கிறார். நான் என்ன செய்கிறேன், அப்பா?'

'நீ சொல்லும் கதைகளிலிருந்து என் கண் முன் பாரத தேசத்தின் சரித்திரம் வரிசையாகத் தென்படுகிறது. ராமராஜ்யத்தின் மேன்மை யும், பாண்டவர்களின் ஒழுக்கமும், அர்ஜுனனுடைய கர்ம வீரமும், பகவானுடைய அவதாரப் பெருமையும் பிறகு கலியுகத்தில் தர்மமும் சத்தியமும் சற்று குறைந்து நாட்டில் ஐகபத்தியம் குலைந்து ராஜதந்திரம் தலையெடுத்த வகையும், அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் ஹிந்து தர்மத்திற்குப் பதிலாக புத்த தர்மத்தின்கீழ் சத்தியமும் அஹிம்சையும் பரவினவகையும் நன்றாகப் புலப்படுகின்றன. எப்பேர்ப்பட்ட புனித

புருஷர்கள் இந்த நாட்டில் நடமாடியிருக்கிறார்கள்!' சந்திரகுப்தன், அசோகன், சமுத்திரகுப்தன், விக்ர மாதித்யன், ஹர்ஷன், புலிகேசி, ராஜேந்திரன், பல்லவ மல்லன், ராஜஸிம்மன். வீரகம்பணன், கிருஷ்ண தேவராயன்! – சாணக்கியன், காளிதாஸன், பவபூதி, வராஹமி ஹிரன் – இன்னும் எத்தனை பெயர்கள்! மதாசாரியர்கள் எத்தனைபேர்!'

'இத்தனை மகான்கள் நிலைநிறுத்திய ஹிந்து தர்மம் இன்று நாதனற்று இருக்கிறதடா, கண்ணே! ஸ்வாமி ராமதாஸ் சொல்லக்கேட்டாயா? ஹிந்துக்கள் செய்த அபராதம் என்னவோ, பவானி வேடிக்கை பார்க் கிறாள். நாம் நசித்துக் கொண்டிருக்கிறோம்!'

'அம்மா, பவானி வேடிக்கைபார்க்கவில்லை, அவளுக்குத்தெரியாதா?'

'தெரியுமடா குழந்தாய்! வேடிக்கை பார்க்கிறாள் என்று வாயில் வந்துவிட்டது. அவள் சும்மா இருக்கவில்லை, சனாதன தர்மம் நசிக்கும் படி விடமாட்டாள். இன்றிருக்கும் நிலையிலிருந்து அது மேன்மையுற நிச்சயம் ஒரு வழி வகுத்திருப்பாள். எவனோ ஒரு புனித புருஷன் மறுபடியும் தோன்றப்போகிறான். இந்த நாட்டில் சாம்பற்கீழ் கிடக்கும் தணலை ஊதி எரியச் செய்யப்போகிறான், நிச்சயம்.'

'அது யாராக இருக்கக் கூடும் அம்மா?'

'நீயாகக்கூட இருக்கலாம் அப்பா, யார் கண்டார்கள், தேவியின் போக்கை!'

'ராஜபுத்திரர்கள் எல்லோரும் அடங்கிப்போய்விட்டார்களே! ஜயசிங் என்பவர் அவுரங்கஜேப்பின் ஆணையின் கீழ் இருக்கிறாராமே!'

'நீயும் ராஜபுத்திர மரபில் வந்தவன்தான்!'

'எப்படியம்மா?'

'உதயபுரியில் பிரசித்தி பெற்ற வீரர் ராணாபீம்சிங் என்ற மன்னன் ஒருவர் இருந்தார் என்று சொல்லி இருக்கிறேன், அல்லவா? அவருக்கு ராமசிங், பாபாசிங் என்று இரண்டு புதல்வர்கள்; பாபாசிங் தெற்கு பிரதேசத்தை வெகு சிறப்பாகப் பரிபாலித்து வந்தார். அவருக்கு பாபா பான்ஸலே என்ற பெயர் வழங்கலாயிற்று, அவர் வழியில் தோன்றியவர் உன் தகப்பனார்.'

'பாபா பான்ஸலேக்கு புத்திரர்கள் உண்டா?'

'நான்குபேர். மூத்தவர் மாலோஜி என்பவர். அவருடைய குமாரன் உன் தகப்பனார்.

'உன் தகப்பனார் பெயர் லக்ஜியாதவராவ் அல்லவா?'

'ஆமாம். மாலோஜியும் யாதவராவும் நண்பர்கள், சம்பந்தம் நடந்தது. அது பெரிய கதை!'

'அதைச் சொல்லி இருக்கிறாய், அம்மா! ஆமத் நகர் சுல்தான் மரணமடைந்ததும் இளவரசர்களைக் கவனிக்கவும் ராஜ்யத்தைக் கவனிக்கவும் அப்பா நியமனம் செய்யப்பெற்றார் அல்லவா?'

'பிறகு உன் தாயைப் பெற்ற தகப்பனாரே தன் மருமகனுக்குச் சங்கடங்கள் உண்டாக்கினார். ஆமத் நகர் மீது படையெடுக்கும்படி டில்லி பாதுஷாவைத் தூண்டினார். டில்லியிலிருந்து வந்த மீர்ஜம்லா வுடன் உன் பாட்டனாரும் சேர்ந்துகொண்டார். பெருவாரியான மொகலாயப் படையுடன் வெகு காலம் போர் நடந்தது. கடைசியாக உன் தகப்பனார் வேறு வழியின்றி என்னுடன் பீஜப்பூருக்கு தப்பி யோடினார். நீ அப்பொழுது என் வயற்றில் ஏழுமாதக் குழந்தை. என்னால் குதிரைமேல் போக முடியவில்லை. பின்தொடர்ந்த என் தந்தை என்னை ரகசியமாக சிவநேர் கோட்டைக்கு அனுப்பினார். அங்கேதான் நீ ஜய வருஷம் வைகாசி மாதம் சுக்கிலபட்சத்துப் பஞ்சமி யன்று பிறந்தாய்!'

'உன் கஷ்டகாலத்தில்!'

'கஷ்ட காலத்தில் – ஆமாம். ஆனால் உன்னால்தான் அந்த கஷ்ட காலம் இன்ப காலமாயிற்று. உன் தகப்பனாருக்கு பீஜபூர் சுல்தானிடம் செல்வாக்கு ஏற்பட்டது. பீஜபூர் மேல் படையெடுத்த மொகலாயரை முறியடித்ததில் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்ட உன் தகப்பனா ருக்கு சுல்தான் புனா, ஸுபா, என்ற இரண்டு ஜாகீர்களைக் கொடுத்தார். ஆனால் உன் தந்தையால்தான் மொகலாய சாம்ராஜ்யம் தெற்கே பரவ முடியவில்லை என்று கண்டு கொண்ட மொகலாயர்கள் உன் தந்தையை நாசம் செய்ய முயற்சித்தார்கள். நான் உன்னை அப்பொழு தெல்லாம் மறைத்து வைத்து வளர்க்கவேண்டியதாக இருந்தது.

'என்னால் உனக்கு எவ்வளவு கஷ்டம்!'

'உன்னால் எனக்குக் கஷ்டமே தோன்றவில்லை. ஆனால் என்னால் தான் தனக்கு அவ்வளவு கஷ்டம் என்று எண்ணியே உன் தகப்பனார் மறுவிவாகம் செய்துகொண்டார்.'

'அதற்குப்பிறகு நடந்த தெல்லாம் எனக்குத் தெரியும் அம்மா!' என்னைக்கூட்டிக்கொண்டு நீ பீஜபூர் சென்றாய். அங்கே எனக்கு விவாகம் நடந்தது. நான் செய்த சில செயல்கள் தகப்பனாருக்கு பயத்தைக் கொடுத்து விட்டன. உன்னையும் என்னையும் இங்கே அனுப்பி விட்டார்.'

'அது முதல் முக்தாநதிக் கரையிலிருக்கும் இந்தப் பூனாவே நமக்கு வாசஸ்தானமாகிவிட்டது. இந்த வாசத்தில் தாதாஜியின் ஆதரவும் பராமரிப்பும் தான் நமது ஆறுதல்.'

'அவர்தான் நமக்கு வால்மீகி என்று சொன்னாயே, அது முற்றிலும் தகும். அர்ஜுனனுக்கு துரோணன் அமைந்ததுபோல தாதாஜி எனக்கு அமைந்திருக்கிறார்.'

'ஆனால் உனது லட்சியங்கள் அவருக்கு பீதியை உண்டாக்குகின்றன. உன்மனதை நான் அதிகம் கிளரக்கூடாது என்று என்னை எச்சரிக்கை செய்கிறார். நான் வேண்டுமென்றா கிளருகிறேன்!'

'இல்லை, அம்மா, உன் சொற்கள்தான் எனக்கு சுயநினைவை அளிக்கின்றன. என் சக்தியை நான் அறிந்து வளர்க்கும்படி செய்கிறாய். இந்த பாரதசக்தியின் அழியாப்பெருமையை நான் உன் வாய்மூலம் அறிகிறேன். அம்மா, நீதான் – என் ஜனனியாகிய நீதான் – பாரதசக்தியின் ஸ்வரூபம்! என்னைச் செயல் செய்யக்கட்டளையிடுகிறாய். பழைய பெருமையைப் புகட்டி புதிய ஜீவனத்திற்கு வழியைக்காட்டுகிறாய். அதை நான் கடைபிடிப்பேன். நீ பவானி, உன் வாக்கு பவானியின் வாக்கு. அது என் லட்சியம்; சத்தியம்! என்று சிவாஜி அவேசத்துடன் பேசினான்.

ஜீஜா மௌனமாக பவானியை நினைந்து உருகினாள்.

2. குருவும் சீடனும்

பூனா ஜாகீரைச் சேர்ந்த நிலங்கள் பயிராகும் காட்சியைப் பார்த்துக் கொண்டே தாதாஜி கன்ஹதேவர் நடந்தார். பின்னால் பஞ்சபாண்டவர்கள்போல இளம் சிவாஜியும் அவனுடைய அந்தரங்க நண்பர்கள் – தானாஜி மால்ஸுரே, பாஜி பஸல்கர், யசாஜி கங்க், தாதாஜி பல்கர் – நால்வரும் சுற்றுமிருந்த வளப்பத்தைப் பார்த்துக்கொண்டே தாதாஜி சொன்னதைக் கேட்டவண்ணம் சென்றார்கள்.

'சிவாஜி, நாம் இங்கே வருவதற்கு முன்னால் இந்த நிலங்கள் எல்லாம் பயிரிடுவாரற்றுத் தரிசுகளாகக் கிடந்தன. படையெடுக்கும் சேனைகளின் தொந்திரவுக்குப் பயந்து ஜனங்கள் இவ்விடத்தைவிட்டு வேறு இடங்களுக்குச்சென்று வசிக்கலானார்கள். காட்டுமிருகங்கள் இங்கே குடி புகுந்தன. ஊரே பாழடைந்துவிட்டது.'

'நாம் வந்த பிறகுதானா இவ்வளவு குடிகள் இங்கே வந்திருக்கிறார்கள்!' என்று சிவாஜி சந்தோஷத்துடனும் ஆவலுடனும் கேட்டான்.

'ஆமாம் அப்பா! பவானி தேவி போன்ற உன் தாயாரும் ராஜ்ய ரேகை கொண்ட நீயும் இந்தப் பூமியில் கால் வைத்த தருண முதல் இது செழிக்க ஆரம்பித்துவிட்டது!' என்று கன்ஹ தேவர் சிவாஜியின் முகத்தைப் பெருமையுடன் திரும்பிப் பார்த்தவண்ணம் சொன்னார்.

'உங்கள் முயற்சியால்தான் இந்தப் பிரதேசம் புனர் நிர்மாணம் பெற்றது என்று அம்மா சொல்லுவாள்!'

காட்டு மிருகங்களை அழிப்பதற்காக பரிசுகள் தந்தோம். இலவசக் குத்தகைகள் கொடுத்து ஆசைகாட்டி குடிகளை வரவழைத்து நிலங்களை உழுது பயிரிடச் செய்தோம். இந்த ஜாகிரின் பாதுகாப்பிற்காக உள்நாட்டுத் துருப்புகளை ஏற்படுத்தி ஆங்காங்கு ராணுவ முகாம்களையும் ஸ்தாபித்தோம்!'

'இந்த ஜாகிரின் பரப்பு என்ன?'

'இதற்கு மேற்கே மலைகள்; வடக்கே கோட்நதி; கிழக்கே பீமா நதி; தெற்கே நீரா நதி; இதன் வருஷ வருமானம் 40,000 காசுகள்.'

'அழகாக அமைந்திருக்கிறது இந்தப் பிரதேசம். மூன்று நதிகளை மூன்று பக்கங்களிலும், ஸஹ்ய மலைத்தொடரை ஒருபக்கத்திலும் எல்லைகளாகக் கொண்ட இந்த ஜாகிர், பவானி மாதாவின் இருப் பிடமாக இருப்பதில் என்ன ஆச்சரியம்?'

'அதில் நீயும் இருக்கிறாய் அப்பா!'

'இந்த ஜாகிரை செழிப்பு மிக்கதாகச் செய்துவிட்டீர்கள். இந்த ஜாகிரில் பயிர் தழைத்து நிற்கிறது. உங்கள் முயற்சியால் ஏறியிருக்கும் இந்தப் பயிர்களிலேயே நானும் ஒருவன். என் உள்ளமும் உங்கள் உபதேசத்தால் தழைத்து வருகிறது. இந்த ஜாகிரின் வளப்பத்தையும், சௌக்கியத்தையும், மாவலி வீரத்தையும், மாதாவின் பக்தியையும், ஒழுக்கத்தையும் எத்திக்கிலும் இடம்கொண்ட மட்டும் பரவச் செய்ய வேண்டும். அதுதான் என் ஆசை. நீங்களும், தாயும் எனக்குக் கற்பித்த தர்மத்தை எங்கும் விரிய ஸ்தாபிக்கவேண்டும். அப்பொழுது தான் நான் பிறந்து, வளர்ந்து, அறிந்ததற்கு அர்த்தமுண்டு. ஆகவே அதுதான் என் லட்சியம். இந்த ஜாகிரில் பிறந்த, இந்த உணர்ச்சி, உங்கள் ஆசீர் வாதத்தில், இதோ இந்த சகாக்கள் மூலமும், என் மூலமும் திக்குகளை எட்டிப்பிடிக்க வேண்டும். இந்த தேசத்தையே ஒரு மகாராஷ்டிரமாக்க வேண்டும்!'

'குழந்தாய், அப்படியெல்லாம் நீ கனவு கண்டு பொழுது போக்கக் கூடாது. அருகே இருக்கும் பீஜப்பூர், ஆமத் நகர் சுல்தான்களும் வடக்கே ஆளும் மொகலாய பாதுஷாவும் வெல்லற்கரியவர்கள். மகம்மதிய ஆதிக்கம் இந்த நாட்டில் அப்படி வலுத்து விட்டது. அதைத் தகர்க்க முயலுவது பைத்தியக்காரத்தனம். அது இப்பொழுது முடியாத காரியம் உன் பயிற்சியையும், அறிவையும் பயன்படுத்திக்கொள்ள நீ பக்கத்து சுல்தான்களின்கீழ் உத்தியோகம் பெற்று வாழ்வதுதான் நலம்.

'அன்னியர் கீழா? இந்தப் பூமியில் பிறந்து, இந்தப் பூமியின் சிறப்பை அறிந்து – பிறகும் இதைத் தற்காலிகமாகக் கைக்கொண்டுவிட்ட அன்னியருக்கா அடங்கி நடப்பது? அதற்காகவா தாய் இவ்வளவு உணர்ச்சி பெறச் செய்தாள்? அதற்காகவா நீங்கள் எனக்கு இவ்வளவு பயிற்சி அளித்தீர்கள்? அதற்காகவா நான் இந்த நான்கு சுத்த வீரர்களை என் சகாக்களாக்கிக் கொண்டிருக்கிறேன்? தாதாஜி, நீங்களா எனக்கு இம்மாதிரி யோசனை கூறுகிறீர்கள்?' என்று சிவாஜி துக்கத்துடனும், கொஞ்சம் ஆத்திரத்துடனும் பேசினான்.

'குழந்தாய், காலதேச வர்த்தமானங்களை அனுசரித்து வாழ்ந்தால் தான் சுகம்' என்று தாதாஜி நிதானமாகச் சொன்னார்.

'கஷ்டப்பட்டாவது காலதேச வர்த்தமானங்களை எதிர்த்து மாற்றினால் என்ன? அதுவும் அவை உற்றவையல்ல என்று தெரியும் பொழுது'

'சக்தி வேண்டாமா?'

'சக்தி பவானி அளிப்பாள்; நிச்சயம்!'

'சிறு ஜாகிர்தாரான நீ, இரண்டு சுல்தான்களையும் ஒரு சக்கர வர்த்தியையும் எதிர்த்து உன் லட்சியத்தை நிறைவேற்ற முடியுமா?'

'கிருஷ்ணன், கீதையில் அர்ஜுனனுக்குச் சொன்னதை நீங்கள் எனக்குச் சொல்லியிருக்கிறீர்களே! முடியுமா முடியாதா என்பதை விசாரிக்க நாம் யார்? செய்யவேண்டியதை தளர்ச்சியின்றி, விருப்பு வெறுப்பின்றி செய்ய முனைவதுதான் நமது கடமை. முடிவு எப்படியானால் நமக்கென்ன? 'கடமையைச் செய்!' என்பதுதானே கட்டளை; தாங்கள் சொன்னபடி?'

'குழந்தாய், நீ கடமையைச் செய்ய முற்படுமுன் அதற்குத் தேவையான பலம் உனக்கு இருக்கிறதா என்று நீ தீர்மானித்துக் கொள்ள வேண்டாமா?'

'நான் சொல்வது சரி என்ற தர்மத்தின் பலம் போதாதா? வேறென்ன பலம் வேண்டுமா?'

'தேவையான பக்குவம் வேண்டாமா? நீ சிறு பிள்ளையல்லவா?'

'உங்கள் அருளாலும், தாய் அருளாலும் இந்த வயதிலேயே அர்ஜுனனுக்கேற்பட்ட பக்குவம் எனக்கு ஏற்பட்டு விட்டது. இந்த சகாக்களின் உதவியுடன் இந்த புண்ணிய பூமிக்காகவும், அதன் தர்மத்திற்காகவும் ராமன் போல வனவாசமிருந்து, பாண்டவர்போல மறைந்து திரிந்து துக்கத்தையும் கஷ்டத்தையும் உதவிகளாக்கிக்கொண்டு நான் எதையும் செய்ய முன்வந்துவிட்டேன்! உங்கள் ஆசீர்வாதம்தான் வேண்டும்!'

'லட்சியத்தைக் கடைப்பிடிப்பதிலும் நடைமுதல் பலன்களைச் சற்று கவனிக்கவேண்டும்.'

'தாதாஜி, கீதையில் அப்படியா சொல்லுகிறார்? நடை முதல் பலன்களை ஊகித்து அங்கம் நடுங்கின அர்ஜுனனைப் பார்த்து கிருஷ்ணன் என்ன சொன்னார்?'

'சிவாஜி, நீ மகா புத்திசாலி! உன் லட்சியமும் மகத்தானது. ஆனாலும் நான் கிழவன். என் மனதில் ஊக்கமில்லை. உணர்ச்சி இல்லை. நான் பயப்படுகிறேன். நடைமுதலில் பெயர் ஊர் பெற்று சுக சௌகரியங்களை அனுபவித்துவிட்டவன். உன் ஆசையைத் தடுக்க நான் முன் வரக்கூடாது. வந்தாலும் நீ நிற்கமாட்டாய்.'

'குருவின் ஆக்ஞையை நான்–'

'அல்ல அப்பா, என் தலைமுறையும், உன் தகப்பனார் தலைமுறையும் மாறிவிட்டன. இனிமேல் எங்களுக்கு வேலையில்லை. நீங்கள்தான்

முன் நிற்க வேண்டியவர்கள்.'

'துரோணரையும், பீஷ்மரையும்போல நீங்கள் தான் முன் நின்று எங்களை நடத்தவேண்டும்!'

''இல்லை அப்பா, நாங்கள் வாழ்ந்த வகையே வேறு. உங்கள் வாழ்க்கை வேறு. முன்னேறிப் போ! ஜாகீர் எல்லை, நீ செல்லச் செல்ல அகன்று வழி கொடுக்கும். தர்மத்தை மறக்காதே, போ! நான் திரும்பு கிறேன். எனக்கு நேரமாகிவிட்டது!' என்று தாதாஜி திரும்பி சிவாஜி யைக் கட்டியணைத்துக் கொண்டுவிட்டு மௌனமாகத் திரும்பினார். சிவாஜி சகாக்களுடன் மேலே சென்றான்.

3. சோதனை

சிவாஜிக்கு அப்பொழுது வயது இருபத்து ஒன்று. அவருக்குக் கலியாணம் ஆகிவிட்டது. தாதாஜி கன்ஹ தேவர் இறந்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன.

ஒரு நாள் மாலை அவர் ஏகாந்தமாக மனைவியுடன் உப்பரிகையில் உட்கார்ந்துகொண்டு தன் முதல் வெற்றிகளை நினைத்து மகிழ்ந்த வண்ணம் பேசிக்கொண்டிருந்தார்.

'வெற்றிமேல் வெற்றியாக வருகிறதே! ஆனால்–'

'எல்லாம் பவானியின் செயல், அவள் ஊக்கிவரும் கருவி நான்.'

'உங்கள் சகாக்களும் தீரர்கள். யசாஜியும் பாஜியும் நாணாஜி யும் மாவலிச் சேனையுடன் முதல்முதலாக தோரண துர்க்கத்தைப் பிடித்தார்கள்.

'அதில் வெறும் வீரம்மட்டும் வேலை செய்யவில்லை. தந்திரமும் இருந்தது.'

'தந்திரம் எதற்கு? வீரத்திற்கு அது இழுக்காகாதா?'

'நீ சொல்வது வாஸ்தவம்தான். ஆனால் சமபலம் இருக்கிற இரு பகைவர்களிடையே வீரம் தோன்றலாம். பலம் குறைந்தவன் முதலில் வீரத்துடன் தந்திரத்தையும் பிரயோகிக்கவேண்டியது அவசியம். நமக்கு அதிகத் தலைக்கட்டு இல்லை. பொருளும் இல்லை; பகைவர்கள் ஏராளமான சைனியங்களும் பொருள் சகாயமும் உடையவர்கள். சமயத்திற்கேற்றவாறு போர் முறையை வகுத்துக் கொள்வது தான் வெற்றிக்கு வழி.'

'தோரணத்தில் கிடைத்த திரவியத்தைக் கொண்டு கிழக்கே ஐந்து மைல் தூரத்தில் ராஜகட் கோட்டையை கட்டினீர்களே எதற்கு? திரவியத் தைக் கொண்டு சேனை திரட்டக்கூடாதோ?'

'சேனை திரட்டுமுன் அச்சேனை பக்கபலம் கொள்வதற்குச் சகாயமாக

கோட்டைகள் ஆங்காங்கே இருக்கவேண்டியது மிகவும் அவசியம். கோட்டைகள் இருந்தால்தான் சேனைக்குப் பலம்!'

'சரி, சுபா பிரதேசத்து நிர்வாகி உங்கள் சிற்றன்னையின் சகோதரன் ஆயிற்றே, அவரைக் கைதுசெய்து அந்தப் பிரதேசத்தை நீங்கள் கைக் கொள்ளலாமா?'

'சாம்புஜி என் மாற்றாந்தாயின் சகோதரர்தான்; ஆனால் ராஜீய விவகாரம்வேறு, பந்துத்வம்வேறு. என் லட்சியத்தின் குறுக்கே அவர் நின்றார். எனக்குக் கீழ்ப்படியமாட்டேன் என்றார்–அதாவது பவானியின் விருப்பத்திற்கு விரோதமாக நின்றார். ஆகையால் அவரைச் சிறைப் படுத்த வேண்டியதாயிற்று. அவ்வளவுதான். மற்றபடி அவரிடம் எனக்கு வேறு உணர்ச்சியே கிடையாது.'

'சகான் கோட்டை, வரமதி, இந்துபூர் நிர்வாகிகள் எதிர்க்காமலேயே கீழ்ப்படிந்துவிட்டார்கள். கொண்டனா கோட்டையை ஆண்டுவந்த அடில்ஷா பிரதிநிதியை நீங்கள் கைவசப் படுத்தினதும்–'

'புரந்தரக் கோட்டையையும் அப்படித்தான் சேர்த்துக் கொண்டது. அதனால்தான் மேற்குத் தொடர்ச்சி மலையை தாண்டி வடகொங் கணத்தில் கால்வைக்க முடிந்தது.

'மாஹுலி, கலியாணம், தானா ஜில்லாவின் சில பாதைகள், தெற்கே சுரகட், வீரவாடி, தாலா, கோஸால்கட், சுதாகட், கங்கேரி, ராயகட், – எல்லாம் ஒவ்வொன்றாக எவ்வளவு சீக்கிரமாகவும் சுலபமாகவும் உங்கள் கைவசமாயின? என்ன அமோகமான வெற்றி!'

'அந்த வெற்றிகளுடன் கவலைக்கிடமான ஆபத்தும் ஏற்பட்டிருக் கிறது.'

'ஆபத்தா? அது என்ன?' என்று சிவாஜியின் மனைவி திடீரென்று உற்சாகமிழந்து கேட்டாள்.

சிவாஜி சந்தோஷத்துடன் சிரித்துக்கொண்டே 'வெற்றி என்றால் வேண்டும்போல் இருக்கிறதாக்கும். ஆபத்து என்றால் உடனே–' என்று மனைவியை இழுத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டார்.

'என்ன ஆபத்து சொல்லக்கூடாதா?' என்று அவள் கொஞ்சினாள்.

'இந்த வெற்றிகளைக் கண்டதும் பீஜப்பூர் சுல்தானுக்குக் கோபம் வந்துவிட்டது.'

'பீஜப்பூர் சுல்தானுக்கா! உங்கள் தந்தை அங்கே இருக்கிறாரே!'

'அதற்குத்தான் பயப்படுகிறேன். அதனால்தான் பயப்படுகிறேன். இல்லாவிட்டால் பீஜப்பூர் சுல்தானுக்குப் பயந்துபோய் ஆபத்து என்றேனா? அப்பாவுக்கு ஏதாவது ஆபத்து நேரிடுமோ என்று தான் கவலையாக இருக்கிறது. அவ்வளவுதான். பயமொன்றுமேயில்லை. சிவாஜி உன்னைத் தவிர இந்த உலகில் வேறுயாருக்கும் பயப்பட மாட்டான்!' என்று சிரித்துக்கொண்டே அவளை அணைத்துக் கொண்டார்.

அந்த மகாவீரனின் ஆலிங்கனத்தில் அந்த மங்கை கண்ட இன்பம் இன்னும் ஓயவில்லை. வாசற்கதவை யாரோ தட்டின சத்தம் கேட்டது.

சிவாஜி சிங்கம்போலத் திரும்பி கர்ஜித்து 'யாரது?' என்றார்.

'நான்தான் தாணாஜி!'

சிவாஜி குதித்து எழுந்துபோய் கதவைத் திறந்து நண்பனைப் பார்த்து என்ன தாணாஜி, என்ன விசேஷம் ஏன் இந்தப் பதற்றம்?' என்று கேட்டார்.

'சுல்தான் தந்தையாரைக் கைதுசெய்து விட்டாராம்!'

'ஆ! என்ன சோதனை! பவானி, ஏன் சோதிக்கிறாய்?' நான் ஒரு பாவமும் செய்யவில்லையே! வெற்றிவெறி கொள்ளவில்லையே, இறுமாப்புக் கொள்ளவில்லையே, தாயே!' என்று சிவாஜி உரக்கக் கத்தினார்.

அவர் மனைவி அருகில்வந்து நின்றாள்.

'தாணாஜி, என்ன செய்வோம், இப்பொழுது, சொல்.'

'சுல்தான் உங்களை ராஜதர்பாருக்கு வரச்சொல்லி இதோ கடிதம் அனுப்பி இருக்கிறார்!'

திடீரென்று தன் வெற்றிப்பாதையில் தடங்கள் ஏற்பட்டதைப்பார்த்து சிவாஜி நிலைகுலைந்து போய் நின்றார். இரண்டு வருஷகாலத்தில் செய்த செயல்கள் முழுவதும் வீணாகுமோ என்று திகைத்தார்.

அப்பொழுது பவானிதேவியே பிரசன்னமானதுபோல அன்னை ஜீஜா அங்கே தோன்றினாள். உடனே ஸகுபாயி மாமியிடம்போய் நமஸ்காரம் செய்து எழுந்தாள். மாமி மருமகளை அன்புடன் அணைத்துக் கொண்டு 'என்ன ஸகு, என்ன ஒரு மாதிரியாக இருக்கிறாய். அவன் ஏதாவது உன்னைச் சொன்னானா? குழந்தையை என்ன சொன்னாய், சிவா?' என்று மகன் பக்கம் திரும்பினாள்.

அன்னை வந்ததைக்கூட அறியாமல் மெய்மறந்து நின்ற சிவாஜி உடனே நினைவு பெற்று தாயை வணங்கி 'அம்மா ஆபத்து வந்து விட்டது. அப்பாவை சுல்தான் கைது செய்து விட்டார். என்னை தர்பாருக்கு வரும்படி அழைத்திருக்கிறார்!' என்றார்.

ஜீஜாபாயி அப்படியே ஸ்தம்பித்து நின்றுபோய்விட்டாள். சில நிமிஷங்கள் பேசவே இல்லை.

'என்ன செய்யப்போகிறாய் சிவாஜி?' என்று பிறகு சாவதானமாகக் கேட்டாள்.

'உடனே சுல்தானிடம் போகிறேன்!'

'கூடாது, அது தப்பு!' என்று ஜீஜாவும் ஸகுவும் ஏக காலத்தில் சொன்னார்கள்.

'பின் என்ன செய்வது?'

'வேறு ஏதாவது யோசனை செய்யவேண்டும்' என்றாள் ஜீஜா.

'என்ன ஸகு, ஒரு யோசனை சொல்லேன்!' என்று சிவாஜி சொன்னதும்

ஜீஜா, 'ஆமாம் ஸகு, நீ புத்திசாலி, எங்கே?' என்றார்.

'உங்கள் மகன், பீஜப்பூருக்குப் போவது கூடாது. அவருக்கும் அதே கதிதான் நேரும். டில்லி பாதுஷாவுக்கும் சுல்தானுக்கும் பொருத்தமில்லை அல்லவா? பாதுஷாவின் உதவியை நாடினால் என்ன இப்பொழுது?'

சிவாஜி, உடனே 'சபாஷ், நல்ல யோசனை. பாதுஷாவுக்குக் கடிதம் எழுதுகிறேன். அவருடைய கட்டளையை மீற சுல்தான் பயப்படுவார்; பாதுஷாவுக்கு நம்மிடம் அன்பில்லாவிட்டாலும், சுல்தான் பலத்தைக் குறைக்க முற்பட்டிருக்கும் நம்மை அவர் ஆதரிக்க எண்ணுவார்!' என்று சொல்லித் தாயார் முகத்தைப் பார்த்தார்.

'அதுதான் சரி, உன் செயல்களைச் சற்று, நிறுத்திக்கொள்ள ஆக்கிர மித்த தேசத்தை ஸ்திரப்படுத்திக்கொள், பவானியின் உத்தரவு இது. அதற்காகத்தான் உன் தந்தை சிறைப்பட்டு விட்டார்போலும்!'

'அம்மா, அப்படியே செய்கிறேன். பாதுஷாவுக்குக் கடிதம் எழுது கிறேன். ஜாவலித் தலைவர் சந்திரராவ் மோரே தான் நமக்குப் பெரிய இடைஞ்சலாக இருக்கிறார். அவரை அடக்குவதில் முனையலாம். பீஜப்பூர் சுல்தானுக்கு அதில் யாதொரு கோபமும் ஏற்படாது. என்ன தாணாஜி?'

'அவர் வழிக்கு வரமாட்டாரே! பணச்செருக்கும் பலச்செருக்கும் கொண்டல்லவா துள்ளுகிறார் அவர்!' என்றார் தாணாஜி.

'ஆத்திரேயரையும் சாம்பாஜி பாவாவையும் முதலில் அவரிடம் ஒப்பந்தம்பேச அனுப்புகிறேன். அதற்குள் நான் மகாபலேசுவர மலை யைக் கைப்பற்றியாகவேண்டும். பவானி தேவி அங்கிருக்கிறாள், அவள் என்னுடைய எல்லைக் கோவில் கொண்டவளாக ஆக வேண்டும்!' என்று சிவாஜி உணர்ச்சியுடன் சொன்னார்.

'சந்திர ராவ் இசையமாட்டார்!'

'எனக்குத் தெரியாதா அது? ரகுநாதரை முன்னாக அனுப்பிவிட்டு நாம் பின்னால் ரகசியமாகச் சென்று அவரை கைது செய்யவேண்டும்!'

'சிவாஜி, பெரிய வேலையைக் கைக்கொண்டிருக்கிறாய். அதில் ஏற்படும் சிறு தடங்கல்களை நீக்கவேண்டியது தான் சமயோசிதமாக!' ஆனால் ஜாக்கிரதை! பவானியை மறக்காதே!' என்று ஜீஜா கம்பீரமாக எச்சரிக்கை செய்தாள்.

4. லட்சியமும் தர்மமும்

ஜாவலிப்பிரதேசம் கைவசமானதும் அதற்கு இரண்டு மைல் மேற்கே பிரதயகட் என்ற புதுக்கோட்டையொன்று கட்டி சிவாஜி அதில் பவானி தேவியை பிரதிஷ்டை செய்தார்.

ஜாவலிப் பிரதேசத்தைக் கைக்கொண்ட முறைமட்டும் ஜீஜா பாயிக்கும் மனதில் கலக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது. ரகுநாதகோர்டே என்ற பிராமணர் சிவாஜியின் சார்பாக சந்திரராவ் மோரேயிடம் பேசப் போனார். போகும் பொழுதே சந்திரராவ் சிவாஜியின் பேச்சுக்கு இணங்காவிட்டால் அவரைத் தந்திரமாகக் கொலைசெய்து விடுவதென்ற தீர்மானத்துடனேயேதான் அவர் போனதாகவும் சிவாஜியும் ஆமோதித்த தாகவும் சரித்திரம் கூறுகிறது.

ரகுநாதர் சந்திரராவின் பெண்ணை சிவாஜிக்குக் கொடுக்கவேண்டு மென்று கேட்டார். கலியாண சம்பந்தமாகப் பேச்சுகள் நடந்தன. அதில் பேச்சுவார்த்தை முற்றியோ அல்லது சந்திரராவ் எதிர்பாராமலேயோ ரகுநாதர் வாளை உருவி மோரேயைக் குத்திவிட்டார். சில சில்லரை எதிர்ப்புகளை வெகுசுலபமாக நீக்கிவிட்டு அருகில் மகாபலேசுவரத்தில் முகாமிருந்த சிவாஜி அந்தப் பிரதேசத்தைக் கைக்கொண்டார்.

'ரகுநாதரே, பீஜபூர் நண்பர்களான பிரபுக்கள் சிபார்சால் தகப்பனார் விடுதலையடைந்துவிட்டார் என்று கவலை நீங்கி இருக்கும்பொழுது இந்த சந்திரராவ் சம்பவம் மனதில் வேதனைப்படுத்துகிறது. எந்த உயர்ந்த லட்சியத்திற்காகவும் தர்ம விரோதமான காரியத்தை நாம் செய்ய உரிமை உண்டா?' என்று சிவாஜி கலக்கத்துடன் கேட்டார்.

'மகராஜ், இதே கேள்வியைத்தான் அர்ஜுனனும் கேட்டான். பகவான் அளித்த பதில் தங்களுக்குத் தெரியாதது அல்ல.'

'சந்திரராவ்மோரே பணிந்துபோகாவிட்டால் அவருடன் தர்மயுத்தம் செய்திருக்க வேண்டும். இது மாதிரி தந்திரமாகக் கொலைசெய்வது ஒருக்காலும் நியாயமில்லை.' என்று ஜீஜாபாய் சொன்னாள்.

'தாயே, தர்மத்தையும் அதர்மத்தையும் நிர்ணயிப்பன காலதேச வர்த்தமானங்கள்தாம். அவற்றை மீறி நிற்கும் தர்மம் கிடையாது, நிற்கவும் முடியாது. ஒரு யுகத்தில் தர்மம் என்று இருப்பது மறுயுகத்தில் அதர்மமாக மாறலாம், அதர்மம் தர்மமாகலாம்' என்று ரகுநாதர் முடிப்பதற்குள் ஜீஜா குறுக்கிட்டு 'நீங்கள் சொல்லுவது விபரீதமாக இருக்கிறது' சனாதன தர்மம் இல்லையா?' என்று கேட்டாள்.

'சனாதனமான தர்மம் – மூலதர்மம் – அது எந்தக் காலத்திற்கும் பொருந்தும். நாம் பேசும் தர்மம் வேறு, அது வேறு.'

'தர்மத்தில் இதுவேறு, அதுவேறு என்று உண்டா எங்காவது?'

'பிராணன் எப்படி சனாதனமோ, உயிர்த்தொடர்ச்சி எப்படி சனாதனமோ அந்த மாதிரி அதன் போக்கை நிர்ணயிக்கும் தர்மம் சனாதனம். உழைப்பு, கர்மா செய்வது என்பது சனாதன தர்மம். எப்படிச் சொல்வது, யார் சொல்வது என்ற காலதேச வர்த்தமானப் பிரிவுகள் ஏற்படும்போது தர்மம் தாற்காலிகச்சாயைபெற்று விடுகிறது. நித்தியமான பிரம்மம் பிரகிருதியின் உருவங்களில் அநித்திய பேதங்கள்

கொள்வதுபோல.'

'கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனைக் கொலை செய்யவா தூண்டினார்? மேலும் போர் புரிய அவர்களுக்கு நியாயமிருக்கிறது!' என்று சிவாஜி சொன்னார்.

'நீங்கள் ஒரு லட்சியத்தை நிறைவேற்ற முனைந்திருக்கிறீர்கள். அது பூர்த்தியாவதற்கு இடைஞ்சலாக சந்திரராவ் நின்றார்; ஒதுங்கி நிற்கவும் மறுத்தார்; ஆகையால் எவ்வளவு துக்ககரமான செயலானாலும் அவரை அகற்ற வேண்டிய அவலம் ஏற்பட்டது. ராஜ்ய ஆசை இல்லை, நேர்முக மான துவேஷமும் இல்லை நம் காரியத்தில்'.

'போர் புரியலாமே?'

'புரியலாம். நமது பலம் இப்பொழுது இருக்கும் நிலைமையில் போர் புரிந்து வெல்வது கடினம். ஆகையால் ராஜதந்திர முறைகளைக் கையாள வேண்டியது அவசியமாயிருக்கிறது. அந்த முறையைக் கையாள அவன் – ராஜா ஒருவனுக்குதான் இடமிருக்கிறது. தனி முறையில் – என் சொந்த விருப்பு வெறுப்பை முன்னிட்டு நான் சந்திரராவைக் கொலை செய்திருந் தால் நான் குற்றவாளி. ராஜதர்மத்தை ஸ்தாபிக்கும் பொருட்டுச் செய்த காரியமாதலால் அது கொலையும் ஆகாது, குற்றமும் ஆகாது. தனி முறையில் உங்களையும் அது பாதிக்க முடியாது. மகாராஜாவின் செயல் அது சிவாஜியின் செயல் அல்ல.'

'தர்க்க ரீதியாக உங்கள் சமாதானம் சமத்காரமாகத் தான் இருக்கிறது.'

'இல்லை. பின் யுத்தங்களையெல்லாம் – கணக்கற்ற கொலைகளை யெல்லாம்–எப்படி நேர்மையானவை என்று கூற முடியும்? எந்தத் தனி யுத்தவீரன் பழி ஏற்க முடியும்? மேலும் நான் சந்திரராவைத் தாக்கிய பொழுது அவரும் ஆயுதபாணியாகத்தான் இருந்தார். அவரே என்னைக் குத்தியிருந்தாலும் இருக்கலாம்.'

'ஆனால் அவர் எதிர்பாராமல் நீர் அவரைத் தாக்கவில்லையா?'

'மகாராஜ்! தங்களிடமிருந்து ஆயுதம் பூண்டுவந்த தூதனை ஆயுதம் தாங்காமல் சந்திப்பாரா சந்திரராவ்? அவர் சாதாரண உடையில் இருந்து நான் ஆயுதம் தாங்கி இருந்ததால் அவர் என்னை உடனே ஆயுதத்தைக் களையச் சொல்லமாட்டாரா? அல்லது தானே ஆயுதம் பூண்டுவிட மாட்டாரா? இந்த மாதிரியான சந்திப்புகளில், எதுவும் நேரலாம். எதிர்பார்த்துத்தானே இருதரப்பினரும் ஜாக்கிரதையாக இருப்பது வழக்கம்? நம்முடைய முறையில் ராஜதந்திரம் பிரயோகமான இடம் இது தான்; சைனியங்களை மேற்காட்டாமல் தனிமனிதர்கள் மோதிக் கொள்ளும்படி சந்தர்ப்பங்களை ஏற்படுத்தினோம். மற்றபடி நான் செய்த திலோ, நீங்கள் என்னை ஆமோதித்ததிலோ பிசகில்லை.

'ஆனால் லட்சியம் என்ற சாக்கில் எது வேண்டுமானாலும் செய்ய லாமோ?' என்று சிவாஜி பதட்டத்துடன் கேட்டார்.

'தாங்களே இப்படிக் கேட்டால் நான் எப்படிப் பதில் சொல்லமுடியும்? இங்கே நிலைமை எப்படி? கொலையே செய்வதாகவே வைத்துக் கொள்வோம். லட்சியத்திற்காகக் கொலை செய்தோமா? அல்லது கொலை செய்வதற்காக லட்சியத்தை ஏற்படுத்திக் கொண்டோமா? எது முந்தினது? லட்சியமா? கொலையா?' என்று ரகுநாதர் சற்று ஆவேசத் துடன் கேட்டார்.

சிவாஜியும் ஜீஜாவும் சிறிது நேரம் பேசவில்லை.

'பிரபோ, நான் பிராமணன். கொலையோ போரோ என் தொழில் அல்ல. சந்திரராவ் எனக்கொன்றும் தீங்கிழைக்கவில்லை. எனக்கு அவரிடம் ஒரு துவேஷமும் இல்லை. அல்லது நீங்கள் சொன்னதைச் செய்வதால் உங்கள் பிரீதியை பெறலாம் என்ற நோக்கத்துடனும் நான் செய்யவில்லை. 'நான் பிராமணன், ஐயோ என்னால் ஆகாது!' என்று நான் சுலபமாகச் சொல்லியிருக்கலாம். நீங்கள் என்னை ஒன்றும் செய்து விடப்போவதில்லை...'

'எதற்காக இதைச் செய்தேன். என் உயிரையும் இழக்கத் தயாராகி?...

'உங்கள் லட்சியம் மகத்தானது. உங்கள் ஆசை தாய் சம்மதமானது. பாரத சமுதாயம் தலையெடுக்க வேண்டுமென முனைந்திருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆகையால் உங்கள் வேலையைச் செய்யச் சித்தமானேன். இது பாவம் என்றால் பழி என்னுடன் நிற்கட்டும்; சரித்திரம் என்னைத் திட்டட்டும் நீங்கள் செய்யவில்லை இந்தக் காரியத்தை!'

'ரகுநாதரே, மன்னியுங்கள் என்னை! உங்கள் ஆக்கிரகத்தைக் கிளப்பி விட்டேன். உங்களுடன் நானும் இதற்குப் பொறுப்பாளிதான். இதை சரித்திரம் சரி என்றாலும், தப்பென்றாலும் நாம் தான். இல்லை. நான் தான் பொறுப்பாளி. பவானி என்ன நினைக்கிறாள்?... இது பிசகென்றால் என்னைத் தடுத்திருப்பாள். ஏதாவது இடைஞ்சல் ஏற்படுத்தி – அவள் தடுக்கவில்லை. ஆகையால் இதில் பிசகில்லை. நாம் என்ன சொல்ல விருக்கிறது. அவள் தூண்டுதல் – அவள் நிறைவேற்றுகிறாள் காரியங்களை – நான் கருவிதானே?... தாயே உன் வல்லமைதான் என்ன? புல்லான என்னை வல்லவன் போல நிறுத்தி இருக்கிறாய்!' என் பாதையைச் சீர்ப்படுத்தி விடுகிறாய்!...

'சிவாஜி, அம்பிகைக்கு ஆராதனை நடக்கிறது வா, போவோம்!' என்றாள் ஜீஜா வேறொன்றும் சொல்ல முடியாமல்.

'ரகுநாதரே!' என்று சிவாஜி திடீரென்று அவருக்கு நமஸ்காரம் செய்தார்.

'சத்ரபதியாக ஆகி பாரததேசத்தை மகா ராஷ்டிரமாக்குங்கள்!' என்று அவர் ஆசீர்வதித்தார்.

பவானி தேவியின் கோவிலிருந்து பெரியமணி கணார் கணார் என்று ஒலித்தது.

5. ஜன்ம விரோதி

பிரதமகட் கோட்டையின் மாளிகை அறையில் சிவாஜி தன் அந்தரங்க நண்பர்களுடன் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

'மொகலாய இளவரசன் அவுரங்கசீப் டில்லி சென்று விட்டது நமக்குப் பெருத்த லாபம்; அங்கிருந்து நம்மை ஒன்றும் செய்ய முடியாது!' என்றார் தாணாஜி.

'இல்லை, தாணாஜி, அவுரங்கஜேப்தான் நமது லட்சியத்திற்கு ஜன்மவிரோதி ஆகப்போகிறார். இன்று அவர் தக்ஷணத்தை விட்டுப் போனாலும் நாம் அவருக்கு இடைஞ்சலாகவும் ஆபத்தாகவும் இருப் பதை அவர் கணம் கூட மறக்கமாட்டார். மொகலாய சாம்ராஜ்யத்தின் எல்லையில் நாம் இருப்பதால் அவருக்குத் தூக்கம் வராது. நம்மை எவ்விதத்திலும் நாசம் செய்துவிடத்தான் முயற்சி செய்வார். அதற்கான எந்த பிரயத்தனத்தையும் அவர் செய்யாமல் விடமாட்டார்; அப்பேர்ப் பட்ட உறுதியும் வைரமும் கொண்டவர் அவர்.'

'என்றோ அவர் கோபம் பலனடைவது இருக்கட்டும் பார்த்துக் கொள்வோம், அந்த சந்தர்ப்பத்தில் நமது பலம் கை மீறி நிற்கலாம், யார்கண்டார்கள்? இன்று பீஜப்புரத்துப் பெண்பிள்ளையின் தொந்தர வல்லவா அதிகமாய்ப்போய் விட்டது!'

'தாணாஜி, பெண் பிள்ளையானாலும் ராணி படீஸாகிபா திறமை யுள்ளவர். அப்ஸல்கான் சுத்த வீரன். பீஜப்புரத்து சைன்யமும் பெருத்தது. ஆகையால் பீஜப்புரத்துப் படையெடுப்பை நாம் சாதூர்யமாகத்தான் தடுக்கவேண்டும்.

'நம்போலவே அப்ஸல்கானும் நேரடியான யுத்தம் செய்ய தயங்கு கிறார் என்று நான் ஒற்றர்கள் மூலம் அறிகிறேன்.'

'ஆனால் துலஜாபூர் பவானிதேவியை தூஷித்ததற்கே நான் பழி வாங்காமல் விடமாட்டேன். அப்ஸல்கான் என்னை கோபவெறிக் குள்ளாக்குவதற்காகவே அந்தச் செய்கையை செய்திருக்கிறார். அதன் பலனை அனுபவிப்பார்.'

'அவருடைய தூதர் கிருஷ்ணஜி பாஸ்கரர் ஏன் இன்னும் வரவில்லை?' அப்ஸல்கான் நம்மிடம் தூது அனுப்புவது வேடிக்கை அல்லவா?' இதில் ஏதோ இருக்கிறது.'

'எது வேண்டுமானாலும் இருக்கட்டும் நாம் நமது பிரதேசத்தருகில் இருக்கிறோம். நமது வீரர்கள் இருக்கிறார்கள், நமது கோட்டையும் நாமும் இருக்கிறோம்–பவானி இருக்கிறாள்!'

அப்பொழுது அப்ஸல்கான் அனுப்பின தூதர் கிருஷ்ணஜி பாஸ்கரர்

உள்ளே நுழைந்தார். சிவாஜி எழுந்துசென்று பிராமணர் என்ற முறையில் அவரை வணங்கிவிட்டு மரியாதையுடன் உட்காரச்செய்தார்.

'அந்தணரே, தூதர் என்ற முறையில் உங்களுக்கு கௌரவம் உண்டு; ஆனாலும் சனாதன மதத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் தனி மரியாதை. பிற மதத்தினரின் சேவையில் நீங்கள் ஈடுபட்டிருப்பது கால வித்தியாசத்தால் ஏற்பட்ட நிலை.'

'மகாராஜ், இந்தக் காரணத்தாலாவது நான் தங்களை தரிசிக்க நேர்ந்தது பெரும்பாக்கியம். பாரத ஜாதியை உயர்த்தப் பிறந்தவர் நீங்கள்!'

'உங்கள் யஜமான் அனுப்பியிருக்கிற செய்தி என்ன?'

'உங்கள் தகப்பனார் கானுடைய பழைய நண்பர். ஆகையால் நீங்களும் அவருக்கு வேண்டியவர்தான். நீங்கள் கானை நேரில் வந்து சந்தித்தால் உங்களுக்கு ஹிதமான ஏற்பாடுகள் செய்து சமரஸம் செய்து கொள்ளலாம். உங்களுக்கு அவர் மூலம் மேலும் பதவியும் கியாதியும் ஏற்படும்.'

கான் எதற்காக இப்படி தூது அனுப்பவேண்டும்? படையெடுத்து வந்தவர் நேராக என்னைத் தாக்கலாமே?' என்று சிவாஜி கேட்டார்.

'செய்யலாம், அப்படிச் செய்வற்குமுன் நல்ல வார்த்தையில் உங்களுடன் உறவு கொள்ளலாம் என்று நினைக்கிறார்' என்று கிருஷ்ணஜி சிவாஜி முகத்தைப் பார்க்காமல் சொன்னார்.

'பண்ட், ஸசமாஜன், சமஸ்தன், சதேசஸ்தன் என்ற நெருங்கிய பந்தங்கள் கொண்டதால் கேட்கிறேன். பண்ட், அப்ஸல்கான் உண்மை யாகவே அப்படி நினைக்கிறார் என நீங்கள் நம்புகிறீர்களா?' என்று திடீரென்று சிவாஜி மிகவும் உருக்கமான குரலில் கேட்டார்.

கிருஷ்ணஜி ஒருகணம் பிரமித்துப்போனார். அவரால் பேசமுடிய வில்லை. சிவாஜியின் தேஜோமயமான முகத்தைப் பார்த்து விட்டுத் தலைகுனிந்து கொண்டார்.

'யார் கண்டார்கள், மகாராஜ்! நான் தூதன் தானே எனக்கென்ன தெரியும்?'

'கிருஷ்ணஜி! பவானி சாட்சியாகச் சொல்லும் உமக்குத் தெரியாதா?' என்று சிவாஜி உறுமினார்.

கிருஷ்ணஜி கம்பீரமாக 'அதைத் தெரிவிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் உண்டா? துரோகம் செய்வது–'

சிவாஜி குறுக்கிட்டு 'பாஸ்கர பண்ட், மன்னிக்கவேண்டும். யாருக்கு எது துரோகமாகும்?'

'கானின் உத்தேசங்கள் எனக்குத் தெரிந்திருந்தாலும் உங்களிடம் தெரிவிப்பது யஜமான் துரோகம்.'

'தெரிவிக்காமல் இருப்பது தேசத்துரோகம்–' என்று பதட்டமாகக்

கூறிவிட்டு சிவாஜி சட்டென்று நிதானமாக 'பண்ட்ஜி, மன்னிக்க வேண்டும் – பதட்டமாகப் பேசிவிட்டேன். ஆனால் மனம் விட்டுக் கேட்கிறேன்.'

'மகாராஜ், தூதை சமர்ப்பித்துவிட்டேன். எனக்கு விடை கொடுங்கள்!'

'கிருஷ்ணஜி பாரத ஜாதியின் லட்சியம் உருவாவதற்கு உதவ உங்களுக்கு மனமில்லையா?'

'மகாராஜ், கானின் உத்தேசங்கள் உங்களுக்கு ஹிதகரமானவை அல்ல என்றுமட்டும் நான் தெரிவிக்கலாம். அவ்வளவுதான்!'

'பண்ட்ஜி, நீங்கள் நன்றாக இருக்கவேண்டும்... தாணாஜி அவரை மரியாதையுடன் நாம் பதில் கூடியசீக்கிரம் அனுப்புவதாகச் சொல்லி அனுப்புங்கள்!' என்று ஒரு நிமிஷம் உடையைப்போல கழற்றி வைத்திருந்த ராஜதோரணையைக் கைக்கொண்டார்.

'ஏன், நாம் யோசித்தபடியே கானின் இஷ்டப்படி அவரைச் சந்திக்கச் சம்மதிக்கிறோம் என்றே சொல்லி அனுப்பிவிடுவோமே! கோபிநாதரையும் கிருஷ்ணஜியுடன் அனுப்பித் தெரிவிப்போமே!' என்றார் தாணாஜி.

'ஆ, ஆமாம், இரவே யோசித்து முடித்துவிட்டேன் பவானியே கனவில் தோன்றி அருள் புரிந்துவிட்டாள். ஆமாம்! சொல்லி அனுப்பி விடுங்கள் கோபிநாதர் மூலம் நமக்கு யாதொரு ஆபத்தும் நேராது என்று கான் வாக்குறுதி கொடுத்தால் நாம் அவரைச்சந்திப்போம்!'

'தாயே! நான் கானை சந்திக்கப் போகட்டுமா? என்று சிவாஜி அப்பொழுது உள்ளே நுழைந்த ஜீஜாபாயியைக் கேட்டார்.

'பவானியின் ஆக்ஞை! சந்திக்காமல் இருப்பதுவும் நலமல்ல; சந்தர்ப்பம்வேறு கிடைக்காது. ஆகையால் உன் சம்மதத்தைத் தெரிவித்துவிடு!

'உத்திரவு தாயே!' என்று சிவாஜி தாயை வணங்கினார்.

6. அப்ஸல்கான்

சிவாஜி அப்ஸல்கானிடம் அனுப்பின தூதர் கோபிநாதர் முக்கியமாக எதிரியின் உத்தேசங்களை அறிவதற்காகவேதான் சென்றார். தான் அப்ஸல்கானுக்கு யாதொரு தீங்கும் இழைப்பதில்லை என்ற வாக்குத் தத்தத்தை சிவாஜி அவர் மூலம் அனுப்பினார்.

கோபிநாதர் போன இடத்தில் லஞ்சத்தை தாராளமாக வழங்கி கானின் ஏற்பாடுகளைப் பற்றிய உளவை அறிந்தார். நேர் முகமான யுத்தத்தில் சிவாஜியைக் கைப்பற்றுவது சிரம சாத்யமென்று கான் அந்த சந்திப்பை வியாஜமாகக் கொண்டு அது நடக்கும்போது சிவாஜியைக் கைதுசெய்து விடுவதாகத் தீர்மானித்திருந்தார். கோபிநாதர் திரும்பி

வந்து சவிஸ்தாரமாக யாவற்றையும் சொல்லி கானின் உத்தேசத்தைப் பாழாக்க யோசனை சொன்னார்.

அதன்படி சிவாஜி தான் மிகவும் பயப்படுவதாகவும் தன் ஊருக்கு அருகில் தான் சந்திப்பு ஏற்படவேண்டும் என்றும் நேரில் அபயமும் பாதுகாப்பும் அளிக்கவேண்டுமென்றும் கானுக்குத்தெரிவித்தார். அவரும் ஒப்புக்கொண்டார். சிவாஜியின் உத்தரவுப்படி பீஜபுர சைனியம் வருவதற்காக வாய் என்ற இடத்திற்கும் பிரதாபகட்டிற்கும் இடையே இருந்த அடர்ந்தகாட்டில் ஒரு இடைவெளி வெட்டப்பட்டது. கான் பிரதாபகட்டிற்குத் தெற்கே ஒரு மைல் தூரத்தில் முகாம் அடித்தார்.

கோட்டையின் அடிவாரத்தில் ஒரு மேட்டின் மேல் இருவரும் சந்திப்பது என்று ஏற்பாடு, அந்த இடத்திற்குப் போகும் வழியில் இருபுரங்களிலும் கைதேர்ந்த வீரர்கள் அங்கங்கே மறைந்து இருக்கும் படி சிவாஜி ஏற்பாடு செய்திருந்தார். சந்திப்பு இடத்தில் பல கூடாரங்களை அமைத்து அழகான மேல் கூரை கொண்டு விலையுயர்ந்த கம்பளங்கள் விரித்து சவுக்கையை நிர்மாணித்தார்.

தன் மேல் ஆடையின் உள் உறுதியான கவசம் ஒன்றை அணிந்து கொண்டார்; தலைப்பாகைக்குக்கீழே எஃகால் செய்யப்பட்ட குல்லாய் அணிந்தார். இடது கையில் புலி நகங்கள் என்று பெயர்கொண்ட கூர்மையான இரும்பு நகங்கள் போன்ற ஆயுதத்தை மறைத்து வைத்துக் கொண்டார். வலதுகைச் சட்டைக்குள் பிச்வா என்ற சின்ன கூர்மையான கத்தியை வைத்துக்கொண்டார். ஜிவமஹலா என்ற கைதேர்ந்த கத்திச் சண்டைக்காரனும் சாம்புஜிகவஜி என்ற அசாதாரணமான தைர்யம் வாய்ந்த வீரனும் சிவாஜியுடன் துணை சென்றார்கள். ஒவ்வொருவரும் இரண்டு வாட்களும் ஒரு கேடயமும் தாங்கி இருந்தார்கள்.

புறப்படுமுன் சிவாஜி பாவனி தேவியின் முன் நின்று வணங்கிவிட்டு தாயிடமும், மனைவியிடமும் விடை பெற்றுக் கொண்டார். மனைவி முகமலச்சியுடன் முன் வந்து தேவியின் பிரசாதமான குங்குமத்தை சிவாஜியின் நெற்றியில் இட்டாள். தாயார் ஜீஜா தவக்கோலம் கொண்ட தபசிபோல மகனை ஆசீர்வதித்து அனுப்பினாள்; உடன் சென்ற வீரர் களிடம் உயிரைக்கொடுத்தாவது சிவாஜியைக் காக்க வேண்டும் என்று உறுதிமொழி வாங்கினாள்.

கான் தன்னுடைய முகாமிலிருந்து பெரிய காவற்படையுடன் கிளம்பினார். அவ்வளவு ஆட்களை கண்டால் சிவாஜி பயந்து சந்திக்க வரமாட்டார் என்றும் சிவாஜியைப்போலவே கானும் இரண்டே மெய்காவலர்களுடன் போகவேண்டும் என்றும் கோபிநாதர் சொன்னார். கானும் அதற்கிணங்கி இரண்டு காவலர்களுடனும் ஸயத்பண்டா என்ற கை தேர்ந்த வாள் வீரனுடனும் பல்லக்கில் குறித்திருந்த கூடாரத்திற்கு வந்தார்.

சிவாஜி ஜாக்கிரதையாக முன்வந்தார். ஸயத்பண்டாவைக்கண்டதும் அவனைத் தூர அனுப்பிவிட வேண்டும் என்று பிடிவாதம் செய்தார். கான் அப்படிச் செய்தபிறகு கூடாரத்தில் நுழைந்தார். ஒவ்வொரு தரப்பிலும் நான்கே பேர்தான் – சந்திக்க வேண்டியவர், இரண்டு காவலர்கள், தூதர்.

காவலர்கள் கீழே நின்று விட்டார்கள். சிவாஜி மேடை மீதேறி அப்ஸல்கானுக்கு முறைப்படி வந்தனம் செய்தார். கான் தமது ஆசனத்தி லிருந்து எழுந்து சில அடிகள் முன்னேறி சிவாஜியை ஆலிங்கனம் செய்துகொள்ள வந்தார். கானின் தோள் உயரம் தான் இருந்தார் சிவாஜி. திடீரென்று கான் ஆலிங்கனப்பிடியை இறுக்கி இடது கையால் சிவாஜி யின் குரல் வளையை நெருக்கினார். வலது கையில் வாளை உருவி சிவாஜியின் இடையில் அடித்தார். ஆனால் கவசம் கீழிருந்ததால் வாள் வெட்டு பயன்படவில்லை. ஒரு நிமிஷம் சிவாஜி கானின் இரும்புப் பிடியில் மூச்சுத் திணற தத்தளித்தார். ஈஸ்வரியை நினைத்தார். மறுகணம் மகத்தான மன உறுதியுடன் வேதனையை உதறித்தள்ளி இடதுகையால் கானின் இடையை நரசிம்ஹன்போல் பிளந்தார். சட்டென்று வலதுகை யால் பிச்சுவாவை மறுபுர இடையில் ஆழச் செலுத்தினார். கான் கைகள் தளர்ந்தன திடீரென்று; சிவாஜி திமிறிக்கொண்டு பிடியிலிருந்து தப்பி மேடையிலிருந்து குதித்துத்தன் ஆட்களிடம் ஓடினார்.

கான் கூக்குரலிட்டார். ஸயத் பண்டா ஓடிவந்து வாளால் சிவாஜி யைத் தலையில் அடித்தான். சிவாஜி ஜிவமஹலா கையிலிருந்த வாள் ஒன்றைப் பிடுங்கிக்கொண்டு பண்டாவின் வீச்சுகளைத் தவிர்த்தார். அதற்குள் மஹலா மற்றொரு வாளால் ஸயத் பண்டாவின் வலது கையை வெட்டி அவனையும் குத்தி வீழ்த்தினான்.

அதற்குள் போயிகள் கானை பல்லக்கில் வைத்துக் கொண்டு புறப் பட்டார்கள். சாம்புஜி அவர்களுடைய கால்களை வெட்டிப் பல்லக்கைக் கீழே போடச்செய்து கானின் தலையை வெட்டி சிவாஜியிடம் கொண்டு போனான்.

உடனே சிவாஜி தன் சகாக்களுடன் கோட்டைக்குச் சென்று குண்டு போட்டார். அவ்வளவுதான். அந்த அடையாளத்திற்காகக் காத்துக் கொண்டிருந்த மராத்தியச் சேனை நாலு பக்கங்களிலிருந்தும் பீஜபூர் சேனைமீது பாய்ந்தது. பீஜபுரவீரர்கள் திகைத்துப் போனார்கள். எதிர் பாராமல் தலைவன் இறந்ததும் தாங்கள் தாக்கப்பட்டதும் அவர்களை செயலறச்செய்துவிட்டன. மூன்று மணி நேரம் இரு சைனியர்களும் கைகலந்து கோரயுத்தம் புரிந்தன. ஆனால் நேதாஜி, பல்கர், மோரோ திரியம்பக் என்ற தீரர்களால் நடத்தப்பட்ட மாவிலிகள் பீஜபுர சைனியத்தை சின்னா பின்னமாக்கிவிட்டார்கள்.

ஏராளமான யுத்த தளவாடங்களையும் பணத்தையும் மராத்தியர்கள்

கைப்பற்றினார்கள்; 65 யானைகள், 4000 குதிரைகள், 1200 ஒட்டகங்கள், 2000 மூட்டைத் துணி, 10 லட்சம் ரூபாய்கள்,நகைகள். சிறைசெய்யப் பட்ட பெண்கள், குழந்தைகள், பிராமணர்கள் முதலியோர் உடனே விடுதலை பெற்றார்கள்.

பின்னால் நடந்த சதஸில் சிவாஜி சிறை பிடிக்கப்பட்ட ராணுவ உத்தியோகஸ்தர்களையும் இதரர்களையும் விடுதலை செய்து உணவு, பொருள் பரிசுகளுடன் ஊருக்குத்திருப்பி அனுப்பினார். தீரமாகப் போராடிய மராத்திய வீரர்களுக்குப் பரிசுகளும் மரியாதைகளும் வழங்கினார். காயமடைந்தவர்களுக்கு உபகாரச்சம்பளங்களும், உயிர் இழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு பலதரப்பட்ட உதவிகளும் செய்தார்.

சிவாஜியின் வெற்றி நாட்டில் மகோத்சவமாகக் கொண்டாடப் பட்டது. சுதந்திரம் உதயமாகிவிட்டதென்று ஆரவாரம் செய்தார்கள். புலவர்கள் அந்தப்போரை விவரித்து பாட்டுக்கள் பாடினார்கள்!

பவானி தேவியின் உருவத்தைச் சிதைத்த கொடியவனாக அப்ஸல் கானை சித்திரித்துப் பாடினார்கள். சிவாஜியின் ஆஸ்தான கவிபூஷணர் கானை சீசகனுக்கு ஒப்பிடுகிறார். அப்ஸல்கானை அதர்மத்தின் கொடுமையாகவும் சிவாஜியை அதைத் தவிர்க்க வந்த வீரனாகவும் பாடி நாடெங்கும் பரப்பினார்கள்.

பீஜபுர அதிகாரத்திற்கு இந்த வெற்றியால் பெருத்த குலைவு ஏற்பட்டது. சிவாஜியின் லட்சியம் மேன் மேலும் உருவாக இது ஒரு முக்கியமான பிடியாகவும் இருந்தது.

அப்ஸல்கான் கபடமாக சிவாஜியைக் கொல்லத்தான் வந்தார் என்றும் அதை அறிந்தே சிவாஜி முன் எச்சரிக்கையாக இருந்தார் என்றும், சந்திப்பின்போதும் அப்ஸல்கான் தான் முதலில் சிவாஜியைத் தாக்கினார் என்றும், பிறகு தற்காப்பிற்காக சிவாஜி கானைக் குத்தினார் என்றும் சரித்திரம் ருஜு பூர்வமாக நிரூபித்திருக்கிறது.

7. சிவாஜியின் சாகஸம்

சிவாஜி எதிர்பார்த்தபடியே அவுரங்கஜேப்பின் கோபமும் எதிர்ப்பும் தான் மகாராஷ்டிர ராஜ்ய விரிவிற்குப் பெரும் தடையாக மூண்டன. அப்ஸல்கானை வென்றதாலும், பீஜபுரத்தை தைரியமாக அலட்சியம் செய்து நாட்டை விரிவு படுத்தினதாலும் சிவாஜி தனக்குத் தெற்கே பெரிய சத்துருவாகக் கூடும் என்ற திகில் மொகலாய சக்ரவர்த்தியின் மனத்தில் தோன்றிவிட்டது.

அதற்காக ஸாயிஸ்தாகான் என்ற திறமைவாய்ந்த தளகர்த்தரைத் தன்

பிரதிநிதியாக அவர் தக்ஷிணத்திற்கு அனுப்பினார். ஸாஸிஸ்தாகானும் தனது பெரும் படையுடன் சிவாஜியின் செல்வாக்கையும் பலத்தையும் குறைக்கும்படியான வகையில் அவருடன் போர் ஆரம்பித்தார்.

அதே தருணத்தில் பீஜபுர சுல்தானும் ஸலாபத்கான் என்ற வீரனை அனுப்பி சிவாஜி தங்கியிருந்த பல்ஹலாகோட்டையை முற்றுகையிடச் செய்தார். ஆனால் சிவாஜி சாதுர்யமாக ஸலாபத்கானை ரகசியமாகச் சந்தித்து சிநேகம் செய்து கொண்டார். ஆனால் அடில்ஷா அதையறிந்து நேரில் வந்தார். சிவாஜி ரகசியமாகக் கோட்டையை விட்டு வெளி யேறித் தப்பினார். அடில்ஷாவின் சைனியம் அவரைத் துரத்திக்கொண்டு விசாலகட் வரையில் வந்தது. அதே சமயத்தில் ஸாயிஸ்தாகான் சாகான் கோட்டையைக் கைப்பற்றி பூனாவில் சேனை இறக்கினார்.

சிவாஜியின் சைனிய பலம் மொகலாய பலத்திற்குமுன் நிற்க முடியாது. பீஜபுர சுல்தானும் சிவாஜியை அடக்க முனைந்திருந்தார். இப்படி இரண்டு பெரிய ஆபத்துக்கள் நெருங்கவே சிவாஜி மும்முரமாக ஒன்றும் செய்ய முடியாமல் சிறிது காலம் தயங்கினார்.

கடைசியில் ஸாயிஸ்தாகானைத் தாக்கித் துரத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற தீர்மானத்துக்கு வந்தார்.

ஸாயிஸ்தாகான் பூனாவில் சிவாஜி பிறந்து வளர்ந்த வீட்டில் தங்கி இருந்தார். அவர் குடும்பமும் அதில் இருந்தது. அதைச் சுற்றி காவலாளர்களும் சேவகர்களும் விடுதிகொண்டிருந்தார்கள். சிறிது தூரத்தில் அவருடைய கீழ் தளகர்த்தர் ஜஸவந்தசிங்கும் அவருடைய 10,000 படையும் முகாம் அடித்திருந்தார்கள்.

கைதேர்ந்த வீரர்களாக ஆயிரம் பேரைப் பொறுக்கித் தன்னுடன் கூட்டிக் கொண்டார் சிவாஜி. நேதாஜி பல்கர், மோரேபண்ட் இவர்கள் தலைமையில் இருபடைகளை மொகலாய சைன்னியத்துக்கு இருபுரங் களிலும் சிறிது தூரத்தில் நிறுத்தினார். பாபாஜி பாடஜி என்பவரையும் சிம்னஜி பாபுஜி என்பவரையும் சிவாஜி மெய்க்காவலர்களாகத் தேர்ந் தெடுத்துக்கொண்டு 400 பொறுக்கி எடுத்த வீரர்களுடன் இருட்டின பிறகு பூனாவுக்கு வந்து சேர்ந்தார். நள்ளிரவு வரையில் மொகலாயரோடு மொகலாயராகத் தங்கினார்.

அந்த மாளிகை சிவாஜிக்கு நன்றாக அறிமுகமானதாகையால் சமையலறையிலிருந்து அந்தப்புரத்தைத் தடுக்கும் சுவரில் ஒரு சிறு கதவு இருந்ததும் அது பிறகு அடைபட்டதும் அவருக்குத் தெரியும். மராத்திய வீரர்கள் அந்த இடத்தில் இருந்த கற்களை சுலபமாகப் பெயர்த்து எறிந்தார்கள். சமையல் அறையில் அதிகாலை போஜனத் திற்காக சமையல் செய்ய விழித்துக்கொண்ட சில ஆட்களை வெட்டி வீழ்த்தினார்கள். ஆனால் அவர்கள் மரணவேதனை ஓலங்களும் கற்கள் பெயரும் சத்தமும் சிலரை எழுப்பிவிட்டன. அவர்கள் சந்தேகங்

கொண்டு கானை எழுப்பினார்கள். கான் அவர்களைக் கண்டித்து அனுப்பிவிட்டு மறுபடி தூங்கலானார். சுவரில் ஏற்பட்ட சந்து வழியாக சிம்னஜி பாபுஜியுடன் சிவாஜி தான் முதலில் உள்ளே நுழைந்தார். பின்னால் 200 வீரர்கள் நுழைந்தார்கள். நடுவிலிருந்த படுதாக்களை யெல்லாம் வாளால் கிழித்தெறிந்துகொண்டு சிவாஜிகானின் பள்ளி யறைக்குள் நுழைந்தார். பீதியடைந்த மாதர்கள் கானை எழுப்பினார்கள். கான் எழுந்து ஆயுதம் கைப்பற்றுமுன் சிவாஜி அவர்மேல் பாய்ந்து ஒரே வீச்சில் அவர் கைவிரலைத் துண்டித்தார் அப்பொழுது திடீரென்று அறைவிளக்குகளை அணைத்துவிட்டார்கள். இருட்டில் சிவாஜியின் ஆட்கள் யாரென்று தெரியாமல் பல பெண்களைக் கொன்றார்கள். அதற்குள் கானின் பணிப்பெண்கள் கானை பத்திரமாக வேறோர் இடத்திற்குக் கொண்டு போய்விட்டார்கள். அதே சமயத்தில் பாபாஜி பாபுஜியும் மற்ற 200 பேரும் வெளிக்காவலர்களை மீறிக்கொண்டு உள்ளே புகுந்தார்கள். அதற்குள் ஏகப்பட்ட கூக்குரல் கிளம்பிவிட்டது.

கானின் மகன் அபுல்பட் என்பவன் தகப்பனாரை மீட்க விரைந்து வந்தான். அவனை எதிரிகள் வெட்டி வீழ்த்தினார்கள். மொகலாயர்கள் முற்றிலும் விழித்துக் கொண்டுவிட்டார்கள். என்று அறிந்ததும் தன் ஆட்களைக் கூட்டிக்கொண்டு வேகமாக மாளிகையை விட்டு வெளியேறினார்.

அந்தக் கலவரத்தில் மொகலாயர்கள் அவரை எதிர்க்கவும் இல்லை, பின்தொடரவும் இல்லை. மராத்தியர்கள் ஆறுபேர்தான் சேதம். ஆனால் மொகலாயர்களில் பலர்மாண்டார்கள். ஸாயிஸ்தாகானுக்கே காயம்.

ஸாயிஸ்தாகான் அவமானம் தாங்காமல் அவுரங்கபாதுக்கு பின் வாங்கினார். அவுரங்கஜேப் இந்த விஷயத்தைக் கேள்வியுற்று மிகவும் அதிருப்தி அடைந்து ஸாயிஸ்தாகானை வங்காளத்திற்கு மாற்றினார்.

இந்த சாகஸச் செயல் சிவாஜியின் செல்வாக்கை மறுபடியும் நிலை நிறுத்தியது. எதிரிகள் அவரை ஒரு மாயாவி என்று நினைத்து அஞ்சினார்கள். எந்த இடத்திலும் நுழைந்து விடக்கூடிய மந்திர சக்தி கொண்டவர் என்று சிவாஜி எல்லோராலும் கருதப்பட்டார்.

ஆனால் சிவாஜிக்கு இது ஒருவிதமான ஆறுதலையும் அளிக்க வில்லை. ஸாயிஸ்தாகான் தக்ஷிணத்திலிருந்து விலகினார் என்பதைத் தவிர இதனால் வேறு பிரயோஜனம் ஏற்படவில்லை. இந்த செயல் மக்கள் மனத்தில் சிவாஜியிடம் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திற்று, அவ்வளவுதான்.

ஆனால் நிரந்தரமாக எதிரிகளை அடக்குவதற்கும் தன் லட்சியத்தை நிறைவேற்றுவதற்கும் சைனியபலம் தேவை என்பதை சிவாஜி கண்டார். அதற்கு ஏராளமான, பணம் வேண்டும். பணம் எங்கிருந்து சேகரிப்பது?

அந்த விஷயமாகத்தான் சிவாஜியின் யோசனைகள் திரும்பின.

சுற்றிலும் அன்னியர்களான பலம் வாய்ந்த எதிரிகளை வைத்துக் கொண்டு தன் லட்சியத்தைக் கடைபிடிக்க வந்த வீரன் பக்க பலமில்லாமல் தயங்கினார். மற்ற சுதேச சிற்றரசர்கள் யாரும் உதவி செய்வதாகக் காணோம். சுதேசிகளான ராஜபுத்திரர்களில் சிலர் மொகலாய தளபதிகளாக சிவாஜியை எதிர்க்க வந்தார்கள். சிவாஜியின் செல்வாக்கைக் கண்டு பொறாமைக்கொண்ட மராத்தியரே சிலர் பீஜபுர சுல்தானுடனும் மொகலாய சைன்யத்துடனும் சேர்ந்துகொண்டு சிவாஜிக்கு விரோதமாக உளவு சொல்லிக் கொடுத்தார்கள்.

தீர்க்காலோசனை செய்து சிவாஜி கடைசியாக, அந்தக் காலத்தில் பிரபல வியாபாரஸ்தலமாகவும் ஐசுவரியம் செழித்ததாகவும் இருந்த சூரத் நகரத்தைக் கொள்ளையடிப்பது என்று தீர்மானித்தார்.

8. இரு வீரர்கள்

லாயிஸ்தாகானை அவமதித்துத் துரத்தியபொழுது சிவாஜிக்கு வயது முப்பத்தேழு. அவரைத் துரத்தியதால் சிவாஜிக்கு கியாதி ஏற்பட்டது. ஆனால் சாம்ராஜ்யாதிபதி அவுரங்கஜேபின் கோபம் முழுவதும் தன் மேல் இறங்கும் என்று சிவாஜி உணர்ந்தார். அதற்குத் தயாராவதற்கே அவர் அந்தக் காலத்தில் பெருத்த வியாபாரஸ்தலமும் பல தனவந்தர்கள் வசித்த ஊருமாகிய ஸூரத்தைப் பிடிக்க முயன்றார். ஆனால் அங்கே இந்திய எதிரிகள் மட்டும் இருக்கவில்லை. ஆங்கிலேயர்களும் டச்சு வியாபாரிகளும் பண்டக சாலைகள் வைத்திருந்தார்கள். அவர்கள் ஆயுதங்கள் சேகரித்து வைத்துக்கொண்டு ஆபத்து வந்தபொழுது தற்காப்பு செய்து கொள்ளவும் தயாராக இருந்தார்கள். வெறும் வியாபாரிகள் அவ்விதம் கொஞ்சங் கொஞ்சமாக ஆயுதங்கள் சேகரிக்கவும் படை பலம் கொள்ளவும் விட்ட சாமராஜ்யாதிபதியின் அஜாக்ரதையால்தான் இந்தியாவின் பிற்காலச் சரித்திரமே மாறுதல் அடைந்தது.

அவுரங்கஜேப் சிவாஜியைப் பெரிய எதிரியாக எண்ணினார். அவரை ஹதம் செய்ய சர்வமுயற்சிகளும் செய்தார். ஆனால் மூலையில் சூரத்தில் அன்னிய நாட்டு வியாபாரிகள் வலிவு பெறுவதும், வெறும் வியாபாரத்தை மட்டும் கவனிக்காமல் உள்நாட்டு சச்சரவுகளில் கலந்து கொள்ளத் தொடங்கினதும் அவருடைய கூர்மையான கண்களில் படவில்லை.

சூரத்தில், அன்னிய நாட்டு வியாபாரிகள் இருந்திராவிட்டால் சிவாஜியின் வேலை சுலபமாக முடிந்திருக்கும். உள்நாட்டு எதிர்ப்பு

களை அவர் வெகு சுலபமாக அடக்கியிருப்பார். மேலும் சச்சரவு நீண்டிருக்காது. ஆனால் அன்னியர் அங்கே ஆயுத பலத்துடன் இருந்து கொண்டு நகரத்து மக்களுக்கு சிவாஜியின் படையெடுப்பிலிருந்து தப்ப அபயம் அளித்ததால் சிவாஜி நகரத்து முக்கியஸ்தர்களை கூப்பிட்டு கப்பம் போன்ற வரியை வசூல் செய்ய நினைத்தார். ஆனால் அன்னியர் பலத்தை அண்டிய நகரவாசிகள் சிவாஜியை மதிக்கவில்லை. ஆகவே சிவாஜி பலாத்காரமாக நகரத்தைக் கொள்ளையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாஹர்ஜி போரா, ஸையத் பேக் என்ற இரண்டு லக்ஷாதிபதி களின் வீட்டைத்தாக்கி ஏராளமான பொருள்களைக் கைப்பற்றினார். கோடி ரூபாய் பொறுமான தங்கம், வெள்ளி, முத்துக்கள், வைரங்கள் முதலிய விலையுயர்ந்த சாமான்களைக் கைப்பற்றினார்.

சிவாஜி வருகையைக் கேட்டு ஓடி ஆங்கிலேயரைத் தஞ்சம் புகுந்த இனாபத்கான் என்ற மொகலாய ராஜ பிரதிநிதி, அவர்களுடைய அனுமதியின் பேரிலோ என்னவோ சிவாஜியை மோசக் கருத்துடன் தாக்கிச்கொல்ல முயன்றான். சமாதானம் பேசும் பாவனையாக ஒரு தூதுவனை அனுப்பினான். ஆனால், சிவாஜி அவன் கொண்டுவந்த சமரஸ திட்டத்தை வெறுப்புடன் நிராகரித்தார். உடனே வந்தவன் திடீரென்று உருவிய வாளுடன் சிவாஜியின் மேல் பாய்ந்தான். ஆனால் கூடவிருந்த மெய்க்காவலர் உடனே அவன் கையை வெட்டி விட்டார்கள் சிவாஜி தப்பினார்.

பிறகு அவர் அகமத் நகரையும் இவ்விதமாகவே கொள்ளை அடித்தார். சிவாஜியின் பலம் மளமளவென்று அதிகரித்தது. தென்னிந்திய சிற்றரசர்கள் யாவரும் அவரைக்கண்டு பயந்தார்கள்.

இந்த நிலைமையில்தான் அவுரங்கஜேப், ஜயசிங் என்ற பிரசித்திப் பெற்ற தளகர்த்தரை தக்ஷிணத்திற்கு அனுப்பினார். அவருக்குக் கீழே திலிர்கான், தாவுத்கான், ராஜாராய்சிங் சிசோதியன், ராஜாசுஜன், சிங் பாண்டேலா, சிராத சிங், முதலியவர்களுடன் 14,000 படை இருந்தது.

அவருக்கு வயது அறுபது. கைதேர்ந்த வீரன்; சிறந்த ராஜதந்திரி, முற்றின அனுபவம் வாய்ந்தவர்; ஏராளமான படைபலம் கையில் கொண்டவர். சிவாஜிக்கு நாற்பது வயது கூட இல்லை. ஆனால் வீரன், தந்திரசாலி, பொறுக்கிய வீரர்கள் அடங்கின சிறுபடை கொண்டவர்.

இந்த இரண்டு இந்தியர்களும் கை கலப்பதற்காக ஏராளமான ஏற்பாடுகள் நடந்தன. ஜயசிங் சிவாஜியின் வீரத்தையும் திறமையையும் ஊகித்து அவருக்கு எதிராக தக்ஷிணத்து அரசர்கள் எல்லோரையும் தன்னுடன் சேர்த்துக்கொள்ள முயற்சிகள் செய்தார். மராத்தியர்களையே பலரை லஞ்சம் கொடுத்துத் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். எல்லா முயற்சிகளும் செய்து அதிகாரம் முழுவதையும் தன் கையிலேயே வைத்துக் கொண்டார்.

இவ்வளவு பிரயத்தனங்கள் செய்து வந்த ஜயசிங்கை முதலில் தான் சமரஸத்திற்கு அணுகுவது சரியல்ல என்று சிவாஜி தீர்மானித்தார். ஆகவே முடிந்தவரையில் முன்னேறி வரும் மொகல் சேனையை தான் எதிர்த்துப்போய் நஷ்டமடையாமல் தற்காப்பிலேயே இருப்பதாகத் தீர்மானித்தார்.

மேற்கேயிருந்து எதிரிகள் சிவாஜியைத் தாக்க முடியாது அங்கே மேற்குத் தொடர்ச்சிமலைகள். அங்கே தான் சிவாஜியின் பிரசித்திப் பெற்ற கோட்டைகளும் இருந்தன. கிழக்கேதான் வழி இருந்தது. ஜயசிங் பூனாவில் பலமான படையை ஸ்தாபித்து, 18-மைல் வடகிழக்கி லிருந்த சஸ்வத் என்ற இடத்திலிருந்து போர் தொடங்குவதாக திட்டம் போட்டார். அங்கிருந்து புரந்தரக்கோட்டை தெற்கே 6 மைல்; சிங்ககடமும் ராஜகடமும் 18,24 மைல் மேற்கே.

சிவாஜியின் முழுதிறமையையும் சோதிக்க வல்ல பெரிய ஆபத்து நெருங்கிற்று. சாம்ராஜ்யாதிபதி தன் படைபலம் முழுவதையும் திரட்டி சிவாஜியை அடக்க கிளம்பிவிட்டார். சிறிது போராலும் பெரும்பாலும் சாதுரியத்தாலும் தான் இந்த ஆபத்தைத் தவிர்க்க வேண்டும் என்று சிவாஜி முதலில் சில தோல்விகளைக் கூட அடையத் தயாரானார். எந்தக் காரணத்தாலும் தான் வெகு சிரமப்பட்டு சேகரித்த சேனை பலத்தை அனாவசியமாக வீணாக்குவதில்லை என்று தீர்மானித்து ஜயசிங்கின் முன்னேற்றத்தை வெகு கவலையுடன் கவனித்து வந்தார்.

9. சமரஸம்

சிவாஜி இருந்த இடத்தில் நிலைகொள்ளதவராய் புரந்தரக்கோட்டை யின் மேல் மாடியில் புலிபோல் அங்குமிங்கும் போய்க் கொண்டி ருந்தார். கீழே வஜ்ரகடம் எதிரிகளின் பிரமாதமான தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் அவர்கள் கைவசமாகிக் கொண்டிருந்தது.

'ரகுநாதரே! ஹிந்துவை வீழ்ந்த ஹிந்துவே வந்து முளைத்தான் பாரும்! ஐயசிங் இல்லாவிட்டால் இவ்வளவு பெரிய மொகலாய சைன்யத்தையும் நான் ஒருகை பார்ப்பேன்.

'மகராஜ், ஜயசிங் இல்லாவிட்டாலும் மொகலாய பலம் சமுத்திர மாக இருக்கிறது. சக்ரவர்த்தி தன் சக்தி முழுவதையும் திரட்டி அனுப்பி இருக்கிறார். இதுவரையில் நாம் அவர்களை எதிர்த்து நின்றது சரி, நின்றுதான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் நம்மை மதிக்க மாட்டார்கள். நமது சிறு சாமர்த்தியம் எவ்வளவு பாதகம் விளைவிக்கக் கூடும் என்பதை அவர்கள் அறிந்துவிட்டார்கள்'.

'முரார்ஜிபர்ஜி பிரபு 700 வீரர்களுடன் திலிர்கானை எதிர்த்த சாகஸம்

சரித்திரத்தில் மறக்கமுடியாது. நேர்முகமாக கான் உயிர்ப்பிச்சை அளித்ததை வெறுப்புடன் நிராகரித்து அவர் வீரனாக மாண்டதை யார் மறக்க முடியும்?

'மராத்தியர்கள் திறமை மொகலாயர்களுக்கு அறிமுகமாவதற்கு நாம் இதுவரை எதிர்த்து நின்றது தேவையாகத்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது நாம் சமரஸம் பேசலாம். தருணம் அதற்கு வந்துவிட்டது'.

'சமரஸமா? என்ன வார்த்தை சொன்னீர்? ரகுநாத் என் மூலபலத்தைக் குலைத்த பரமவிரோதியுடன் சமரஸமா? முரார்ஜிபாஜியின் உயிரைக் கொடுத்துப் பிறகு சமரஸமா?'

'பிரபோ, நீங்கள் இவ்வளவு கொதிப்புடன் பேசுவது மிகவும் இயற்கை. ஆனால் உள்ளக் கொதிப்பில் நாம் நமது லட்சியத்தை மறக்கக்கூடாது. தனி நபர்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களைப் பாராட்ட நமக்கு அதிகாரம் கிடையாது'.

'என்ன சொல்லுகிறீர் ரகுநாத்?'

'வஜ்ரகட் எதிரி கைவசமாகிறது. அதோ பாருங்கள்! இனி புரந்தரம் நிமிஷநேரம் தாங்காது. இப்பொழுது நாம் கௌரவமாக ஜயசிங்குடன் சமரஸம் பேசலாம்!'

'அந்த சமரஸம் எனக்கு வேண்டாம்! புரந்தரத்துடன் நானும் மடிகிறேன்!'

'பவானியின் ஆக்ஞை அதல்லவே, என்ன செய்வது?'

'அதல்லதான்!' என்று சொல்லிக்கொண்டு ஜீஜா பாயி அங்கே வந்தாள்.

'என்னைப் பேடியாக்கப் பார்க்கிறீர்களா நீங்கள் எல்லோரும் சதி செய்து?' என்று சிவாஜி உரக்கக்கத்தினார்.

ஜீஜா திகிலடைந்தாள். ரகுநாதர் நிதானமாக 'சிவாஜி, நான் சதி செய்பவனா? பவானியின் அம்சமாகிய உங்கள் மாதா சதி செய்வார்களா? எதற்கு? நாங்கள் பிழைப்பதற்கு உங்களை இழந்து?'

'பின் என்ன?'

'இல்லை, மகராஜ், இல்லை! பிழைக்க வழிதெரியாமல் நான் உங்களுக்கு இப்பொழுது யுக்தி சொல்லிக்கொண்டு இங்கே நிற்கவில்லை என் உயிரின்மேல் அவ்வளவு ஆசை இல்லை எனக்கு சிவாஜி! என்ன தாயே, நீங்கள் என்னசொல்கிறீர்கள்?'

'சிவாஜி, குழந்தாய், எவ்வளவு உணர்ச்சி பெருகினாலும் நிதானத்தை இழக்காதே!'

'என்ன சொல்லுகிறீர்கள் தாயே!' என்று சிவாஜி சட்டென்று தீனமாகப் பேசினார்.

'எந்தத் தருணத்திலும் உணர்ச்சி வசப்படக்கூடாது. என்னவந்துவிட்டது. இப்பொழுது? ஜயசிங் சமுத்திரம் போன்ற சேனையைக்

கொண்டுவந்து உன்னை எதிர்ப்பது சூரத்தனமல்ல. உண்மையில் அது அவருடைய பலவீனம். அவர் உன்னிடம் கொண்டுள்ள பயத்தைக் காட்டுகிறது!' என்று ஜீஜாபாயி சாந்தமாக மொழிந்தாள்.

சிவாஜி திடீரென்று தாயின்முன்பு நின்று தலைவணங்கி 'தாயே, என்னை மன்னியுங்கள். எதிரியின் அட்டகாசத்தின் காரணமாக நானும் சிறிது என்னை மறந்து அகங்காரம் கொண்டுவிட்டேன். ரகுநாதபண்டிட், என்ன சொல்லுகிறீர்கள்?' என்றார்.

ரகுநாதர் முகமலர்ச்சியுடன் முன்வந்து 'மகராஜ், தங்கள் சமரஸக் கோரிக்கையை ஜயசிங்கிடம் தெரிவிக்கிறேன்!'என்றார்.

'கேவலமல்லவா?'

'ஜயசிங் தவம்செய்துகொண்டிருப்பார் அதற்காக மேலும் மராத்திய பலத்தை ஒடுக்குவது தனது கீர்த்திக்கே இழுக்கு என்று அறியாத வீரரா அவர்! நான் நினைக்கவில்லை! கௌரவ முறையில் சமாதானம் கேட்போம். அவர் அதை மறுக்கும் தைரியம் பெறமாட்டார். ஆனால் சற்று லாபங்கள் கோருவார். கொடுப்போம் தாத்காலிகமாக-பிறகு நமது சொத்தை, நமது லட்சிய பாகத்தை திரும்பப் பெறுவது நொடிநேரம். இந்த இடுக்கண்களை சமாளிப்போம். சற்று பணிவோம். பாதக மில்லை - இப்பேர்ப்பட்ட பலத்தின் முன்பு பணிவது நமக்கு ஒருநாளும் குறைவல்ல-சிறப்புதான்!'

'போய் என்ன சொல்லப்போகிறீர்?'

'மொகலாய ஊக்கத்தை சிலாகிப்போம். முக்கியமாக தளபதி ஜயசிங்கின் விடாமுயற்சியைப் பாராட்டுவோம்! சற்று ராஜ தந்திரம் கலந்து ஹிந்து என்ற முறையில் ஜயசிங்கின் உணர்ச்சியைக் கிளப்பி வேலை செய்வோம். உங்களுக்கும் அவருக்கும் சம அந்தஸ்தில் சந்திப்பு ஏற்பாடு செய்கிறேன். பிறகு எல்லாம் சுலபம். நேரில் உங்களிடம் வசமாகாத புருஷர் உண்டா?'

'மொகல் தளபதி ஜயசிங் ராஜபுத்திரர், யஜமான துரோகம் செய்ய மாட்டார்!'

'ஸ்வதேசஸ்தனையும் அனாவசியமாக நசுக்க எண்ண மாட்டார்! உங்கள் லட்சியமும் உங்கள் ஊக்கமும் அவருக்குத் தெரியாது. வெறும் வீரன் என்றே கருதியிருக்கிறார். விருத்தரான ராஜபுத்திரரின் ஹிருதயத்தில் எங்கோ புதைந்து போய்க் கிடக்கும் ஜாதி அபிமானத்தைத் தலையெடுக்கு மாறு தூண்டுவோம். அதுதான் நமது ராஜதந்திரம்!'

'தனது கொள்கையை விட்டுக்கொடுப்பாரா? தான் முனைந்த காரியத்தை நழுவ விடுவாரா?'

'மாட்டார். விட்டாரானால் நாமே அவரை மதிக்க மாட்டோம். தமது கொள்கையைக் கைவிட்டாலும், செய்யும் காரியத்தை விட்டுக் கொடுக்காமலும் அவர் தன் மனச்சாட்சியையும் திருப்தி செய்துகொள்ள

இடமிருக்கிறது'.

'ரகுநாத்ஜி! பவானி உங்களை எனக்கு உதவியாக அளித்த கருணைதான் என்னே!'

'மகராஜ், தங்களுடைய சுத்த வீரத்தன்மையும் தேசபக்தியும் லட்சிய திருஷ்டியும் ஆட்கொண்டுவிட்ட ஏழை நான்! உங்கள் கருவியாக என்னால் சக்திக்கு எட்டின அளவு வேலை செய்ய நான் தயங்கினால் நான் இந்த தேசத்தில் பிறந்த நீசனாவேன்!'

'சமரஸம் பேசுங்கள். ஜயசிங் என்னைச் சந்திக்கச் சம்மதிக்கிறானா பாருங்கள்!'

'காத்துக்கொண்டிருக்கிறார், மகாராஜ்! போய்வருகிறேன்! மகாராஷ்டிரம் இந்த ஆபத்தையும் கடந்துவிட்டது. இனிமேல் நீங்கள் சத்திரபதிதான்!'

'ஜயசிங்கை நான் தனியாக சந்திக்க விரும்புவதாகச் சொல்லுங்கள். மெய்க்காவலர்களாக சில ராஜபுத்திரர்கள் வேண்டுமானால் இருக்கட்டும். திலர்கானோ, தாவுத்கானோ கூட இருக்கக்கூடாது!'

'தெரியும், மகாராஜ்! ஜயசிங்கே அவர்கள் அங்கே இருக்கவேண்டுமென்று விரும்பமாட்டார்!'

'அதெப்படித் தெரியும் உங்களுக்கு?'

'அவர்களை எதிலும் நம்பாமல்தான் ஜயசிங் சகல ஏற்பாடுகளையும் தானே செய்கிறார். அதனால் அவர்களுக்கே மனத்தாங்கல். இவ்விதமாக மொகலாய சைனியத்திலேயே ரகசியமான ஒரு வேற்றுமை இருக்கிறது. சக்ரவர்த்தி ஜயசிங் யோசனையை மீறுவதில்லை. எல்லாம் நமக்கு அனுகூலமாக பவானி நிர்ணயித்திருக்கிறாள். இந்த சோதனைகளும் அவள் வேலைதான். துக்கம் சிரமம் என்ற அக்னியில் இட்டு நம்மை ஸ்புடம்போடுகிறாள்.

'ரகுநாத்பண்ட், மகாராஷ்டிரம் உமக்குக் கடமைப்பட்டிருப்பது'.

'எல்லாம் தாய் கருணை!'

10. லக்ஷ்ய வாதம்

புரந்தரக்கோட்டைக்கு அருகில் ஜயசிங்கின் கூடாரத்தில் சிவாஜி அவருடன் சம ஆசனத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

'மகாராஜ், நீங்கள் வயதில் முதியவர்கள். ஆகையால் நீங்கள் சொல்வதைத் தடுத்துச் சொல்ல எனக்கு தைரியம் வரவில்லை. ஆனாலும் நீங்கள் சொல்வது சரியல்லவென்றே எனக்குத் தோன்றுகிறது'.

'உங்கள் வயதுக் கிரமப்படி நீங்கள் பேசுகிறீர்கள், சிவாஜி! நான் இன்று சொல்லுகிறேன்... எனக்குப் பிறகும் நீங்கள் இருப்பீர்கள். என்

வாக்கு சரியா இல்லையா என்பதை அப்பொழுது பாருங்கள்'.

'அன்னியருடன் நாம் கலக்கவேண்டுமென்றா வாதாடுகிறீர்கள்?'

'அதில் நமது இஷ்டத்திற்கே இப்பொழுது இடமில்லை, சிவாஜி! அன்னியர்கள் என்று குறிப்பிடும் மகமதியர்கள் இந்த நாட்டில் வேரூன்றிவிட்டார்கள். அவர்களை இனிமேல் இங்கிருந்து அசைக்க முடியாது. ஆகையால் அவர்களையும் இத்தேசத்து மக்களாகக் கருதி அவர்களை நம்முடன் கலக்கவிடுவதுதான் தேசத்துக்கு நல்லது, நமது நாகரிகத்துக்கு நல்லது, நமது தர்மத்திற்கு...'

'வேண்டாம், மகராஜ், தர்மத்தின் பெயரை இழுக்காதீர்கள், கேட்டுக் கொள்கிறேன். ராஜதந்திரம் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்!' என்று சிவாஜி சற்று உணர்ச்சியுடன் குறுக்கிட்டார்.

மகாராஜா ஜயசிங் சிரித்த வண்ணம் 'நான் பாதுஷா அவுரங்கஜேபின் ஊழியனாக இருப்பதால் எனக்கு தர்மத்தைப் பற்றிப் பேச உரிமை இல்லை என்று நீங்கள் தீர்மானித்து விட்டீர்கள், அல்லவா? இன்று நீங்கள் மனது திறந்து என்னிடம் பேசினதால் நானும் முதல் தடவையாக - கடைசி தடவையாகவும்கூட... என் அந்தரங்கத்தை திறந்து உங்களிடம் சொல்லுகிறேன். ஆனால் முதலில் இது எனக்குத் தெரியவேண்டும். நான் ராஜபுத்திரன், என் வார்த்தையை நீங்கள் நம்புவீர்கள், அல்லவா?' என்றார்.

சிவாஜி பதட்டத்துடன் 'மகாராஜ்' உங்கள் வார்த்தைகளை நான் நம்பாவிட்டால், நான் ஏன் இங்கே வந்து உங்களுடன் பேசிக் கொண்டிருக்கப் போகிறேன்? எதற்காக புரந்தரக்கோட்டை உடன் படிக்கையின் கடுமையான ஷரத்துக்களை ஒப்புக்கொண்டிருக்கப் போகிறேன்? நீங்கள் என்னுடன் சேர்ந்துவிட்டீர்கள் என்று பாதுஷா சந்தேகப்படாமல் இருக்க, நீங்கள் என்னுடன் கடுமையாக நடந்து கொண்டீர்கள், ஹிந்துவுக்கு ஹிந்துவிட்டுக் கொடுக்கவில்லை என்று பாதுஷா திருப்தி அடைவது இந்த சமயத்தில் எனக்கு நன்மை என்று நீங்கள் வற்புறுத்தினீர்கள்... உங்கள் வார்த்தையை நம்பி என் உயிரைக் கொடுப்பது போல கோட்டைகள் எல்லாவற்றையும் கொடுக்கவில்லை? எனக்கு உங்களிடம் இருக்கும் மதிப்புக்கு வேறு அத்தாட்சி தேவையா?' என்று மடமட வென்று பேசினார்.

ஜயசிங் சிரித்துக்கொண்டே 'சிவாஜி, உங்களைக் காண்பதற்குமுன் நான் உங்களை அடக்கிவிடவேண்டுமென்று எண்ணியதென்னமோ உண்மை தான். ஆனால் உங்களைப் பார்த்த நிமிஷம் எவ்விதமாகவோ என் மனம் திடீரென்று மாறுதல் அடைந்து விட்டது. ராஜபுத்திரர் களுக்குத்தான் வீரம் பிறப்புரிமை என்பதுபோல எண்ணின என் உள்ளத்தில் உங்கள் வீரச்செயல் கம்பீரமாகச் சின்னம் செய்துவிட்டது. உங்களை அடக்க முன்வந்ததற்காக வெட்கமடைந்தேன். என்

முயற்சிக்குச் சரித்திரம் ஒரு கௌரவமும் கொடுக்காது என்பதைக் கண்டேன். வீரம் நசித்துப்போன இந்த நாட்டில் அதன் தணல் எங்கோ சாம்பற் கீழிருந்து கொழுந்துவிட்டுக் கொண்டு உங்கள் ஆகிருதியில் ஜொலிக்கிறது. என்னையறியாமல் எழுந்து முன்வந்து உங்களை ஆலிங்கனம் செய்து கொண்டேன்...'

'நானும் தங்களைப் பற்றி சற்றுக்குறைவாகத்தான் எண்ணி யிருந்தேன்...'

'இப்பொழுதும் எண்ணுகிறீர்கள், நான் 'அன்னியன்' சேவையில் இருக்கிறேன் என்பதற்காக?'

'இல்லை, மகாராஜ் உங்கள் மனப்பான்மை எனக்கு இப்பொழுது விளங்குகிறது. காலத்திற்கேற்ப நமது பழக்கவழக்கங்களையும் பண்பையும் மாற்றி அமைத்துக்கொண்டு மேலோங்கி நிற்கும் பலத்தை அனுசரித்துப் போகவேண்டும் என்கிறீர்கள்!'

'ஆமாம்!'

'அதைத்தான் என்னால் ஒத்துக்கொள்ளமுடியவில்லை!'

'அப்படி நான் இந்த சந்தர்ப்பத்தில் செய்யத் தவறினால் நமது நாகரிகம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்'.

'ஏன் போய்விடும்?'

'உங்கள் உதாரணத்தையே எடுத்துக்கொள்ளுங்களேன். பிரம்மாண்ட மான மொகலாய சைனிய சமுத்திரம் உங்களைச் சூழ்ந்துகொண்டு, உங்களை இருந்த இடம் தெரியாமல் அடிக்கவிருந்தது. ரகுநாத பண்டிதருடைய ராஜதந்திர யோசனையால் நீங்கள் இன்று வெளிவந்து என்னுடன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இல்லை, சிவாஜி, மகம்மதியர் களை இனிமேல் இந்த நாட்டில் எதிர்த்துச் சமாளிக்க முடியாது. நமது மூச்சுப்போய்விடும். இணைந்துதான் போகவேண்டும்.'

'நமது வீரமும், பலமும், ஆள்வலிவும்...'

'அவையெல்லாம் போதாது. மகம்மதியர்களுடைய ஆயுத பலத்தின் முன்பு நமது பலம் எடுபடாது. நமது வீரம் வெறும் சாவாகத்தான் முடியும்'.

'அந்த ஆயுத பலத்தை நாமும் கைக்கொண்டால்?'

'நாளாகும். அதற்குள் சர்வநாசம்தான்'.

'நீங்கள் சொல்வது ஒன்றுதானா வழி?'

'அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. அவுரங்கஜேப் கொஞ்சம் மகாபிமானம் கொண்டவராக இருக்கிறார். ஆனால் நாளடைவில் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துக்கொண்டு இந்த நாட்டில் சேர்ந்து வாழலாம்?'

'நமது தர்மம் போய்விடாதா?'

'சிவாஜி, தர்மம் எப்படிப்போகும்? அது சனாதனமல்லவா?'

'ஆகையால் விட்டுக்கொடுக்காமலேயே இருந்தால்?'

'நாடு பிளவுபடும். சச்சரவுகள் சண்டைகள் அதிகரிக்கும், மக்கள் சிரமப்படுவார்கள்!'

'அன்னியர்கள்...'

'சிவாஜி, நாமே அன்னியர்கள்தானே இந்த பூமிக்கு? ஹிமயம் முதல் குமரி வரை என்று பாரத பூமியின் எல்லை வகுக்கப்பட்டது எப்பொழுது?'

'நீங்கள் பேசுவதால் எனது ஊக்கம் குன்றுகிறது!'

'ஆ, கூடாது, சிவாஜி! உங்களால் இந்த தேசத்திற்கு ஆகவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன என்று ஊகிக்கிறேன். நான் சொல்வதெல்லாம் நீங்கள் மேலும் முனையவேண்டும் என்பதற்காகத்தான். சக்கரவர்த்தியை, எதிர்க்க முயலாதீர்கள். அவருக்குப் பணிந்து ராஜ்யஸ்தாபனம் செய்து உங்கள் பணியை ஆற்றுங்கள். தர்மத்திற்குச் செய்யவேண்டிய...'

'மகாராஜ், அது எப்படி முடியும்? இந்த தேசம் முழுவதும் என் ஆதிக்கத்தில் இருந்தால்தான் நான் என் லட்சியத்தை நிறைவேற்ற முடியும்!'

'அது சிரமசாத்தியமான காரியம். மேலும் போரிலும் முயற்சியிலுமே உங்கள் நாட்கள் கழிந்துவிடும். அது வீண் வேலை. 'ஏனெனில் நீங்கள் சிரமப்பட்டு ஸ்தாபித்தாலும் அந்த சாம்ராஜ்யம் நிலைத்து நிற்காது. ஆகையால் சிவாஜி, நான் சொல்வதைக் கேட்பீர்களா?'

'என்ன சொல்லுங்கள்!'

'நீங்கள் அவுரங்கஜேப்பை நேரில் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன், அவருடன் நட்புகொள்ளுங்கள். நாமிருவரும் சேர்ந்து தெற்கே ஒற்றுமை உண்டாக்குவோம். தக்கணத்துக்கு நீங்கள் சக்ரவர்த்தியின் பிரதிநிதியாக இருக்கலாம்'.

'அவுரங்கஜேப் என்னை நம்பமாட்டார்!'

'நான் செய்கிறேன் நம்பும்படி!'

'டில்லியில் என்னை அவர் கொலைசெய்ய முயற்சிப்பார்!'

'உங்கள் உயிருக்கு நான் ஜவாப்தாரி, என் வார்த்தையில்...'

'நீங்கள் இங்கே இருக்கிறீர்கள்... நீங்கள் என்ன செய்யக்கூடும்?'

'என் இஷ்டத்திற்கு விரோதமா நடக்க, சக்ரவர்த்திக்கு தைரியம் வரும் என்று நினைக்கிறீர்களா? தீர்க்காலோசனை செய்து நான் என் ஸ்தானத்தை வலுப்படுத்திக்கொண்டிருக்கிறேன். யஜமானனுக்குத் துரோகம் செய்யாமல் எனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டிருக்கிறேன். என் யோசனைகளிலும் வார்த்தைகளிலும் அவர் நம்பிக்கை வைக்கும் வகையிலேயே நடந்துகொண்டு வந்திருக்கிறேன்'.

'உள்ளூர அவர் யாரையும் நம்பமாட்டாரே!'

'அப்படி நம்பாவிட்டால் என்ன? நம்புவதாக அவர் நடந்து

கொண்டால் போதுமானது. அது என்று மாறுகிறதோ அன்று நானும் மனசாட்சிக்கு பங்கமின்றி அவரை எதிர்க்கலாம்!'

'அப்படிக்காலம் வரும் என்று எதிர்பார்க்கிறீர்களா?'

'யார் கண்டார்கள் எதிர்காலம் உருவாகும் விசித்திரத்தை! நாம் ஜாக்கிரதையாக இருந்தால் நடப்பது நடக்கட்டும்! டில்லி போகிறீர் களா? -போங்கள், சிவாஜி, நன்மை இருக்கிறதென்று எனக்குத்தோன்று கிறது. உங்கள் லட்சியமே அதனால் பயனடையலாம். என்ன?'

'நீங்கள் சொன்னால் போகிறேன்!'

'சிவாஜி, கைகொடுங்கள். நீங்கள் வீரன்!'

11. கைதி

குமார் ராம்சிங், உங்கள் தகப்பனார் யோசனையைக் கேட்டு நான் என்ன முட்டாள்தனம் செய்துவிட்டேன்!' என்று சிவாஜி துக்கத்துடன் சொன்னார்.

இந்த வார்த்தைகள் ஐயசிங் மகனும் மொகலாயச் சக்கரவர்த்தியின் சபையில் அங்கத்தினனுமான ராம்சிங்குக்கு சுறுக்கென்றுபட்டன.

'மகாராஜ், என் தந்தையின் பேச்சைக் கேட்டு இங்கே மொகலாயச் சக்கரவர்த்தியை பேட்டி காணவந்ததில் தவறு ஒன்றுமே இல்லை'

'பின்?' என்று சற்றுக் கோபத்துடன் சிவாஜி குறுக்கிட்டார்.

'கோபப்படக்கூடாது. தாங்கள் தர்பாரில் அன்று நடந்து கொண்ட முறை சக்கரவர்த்திக்கு அதிருப்தி ஏற்படுத்திவிட்டது.

'நான் எவ்வளவோ என்னுடைய தீர்மானங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, உங்கள் தகப்பனார் பெயர் கெட்டு விடக்கூடாது என்று முறையாக தர்பாரில் நுழைந்தேன், சக்ரவர்த்திக்கு வந்தனம் செய்தேன். சக்ரவர்த்தி என்னைத் தகுந்தபடி மரியாதை செய்யாமல் எங்கோ பின்னால் நிறுத்தினது முறையா?'

'முறையல்லதான், ஆனால் தாங்கள் தர்பாரில் இரைந்து சத்தம் போட்டுக் கலவரப்படுத்தினது சக்ரவர்த்திக்கு...'

'சரி, குமார் ராம்சிங், சக்ரவர்த்தி என்னை என்ன செய்யப்போகிறார்? இப்படியே சிறை வைக்கப் போகிறாரா? கொலை செய்ய'-

'மகாராஜ், கொலை செய்யவிடமாட்டேன். என் தந்தை உங்கள் உயிருக்கு எந்த ஆபத்தும் நேராது என்று, சொல்லி இருக்கிறார். அது பொய்க்கும் படி நான் விடமாட்டேன்!'

'என்னை இப்படிக் காவலில் வைத்திருப்பதில் பாதுஷாவின் நோக்கமென்ன?'

'எனக்குத் தெரியவில்லையே!'

'குமார்சிங், நானும் ஹிந்து, நீரும் ஹிந்து, உண்மையைச் சொல்லி விடும். நீர் எனக்கு உதவி ஒன்றும் செய்யவேண்டாம். பாதுஷாவின் உத்தேசத்தை மட்டும் சொல்லும்'.

'மகாராஜ், உண்மையாக எனக்குத் தெரியாது, பாதுஷா அவ்வளவு தூரம் என்னை நம்புவார் என்று நினைக்கிறீர்களா? என் தந்தையிடமே அந்தரங்கத்தைச் சொல்லமாட்டாரே! ஏன் யாரிடமுமே சொல்ல மாட்டார்!'

'என்னை எங்காவது அனுப்பிவிடுவார் என்று நினைக்கிறீரா?'

'அதையும் நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்!'

'பின் என்னதான் வழி?'

'தந்தைக்கு ரகசியமாக விஷயம் தெரிவித்து ஆள் அனுப்பி இருக் கிறேன். பதிலையும் மேல் நடப்பதையும் எதிர்பார்ப்போம். தெற்கே செல்வாக்கும் பலமும் பெற்றிருக்கும் என் தந்தை யோசனையைப் புறக்கணிக்க பாதுஷாவுக்கு தைரியம் இருக்காது,

'உம் தந்தையை என் ஹிருதயத்தில் நான் ராமதாசருக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து அவர் யோசனைப்படி நடக்க முன் வந்தேன். என் ஜன்ம விரோதியின் வலையில் வக்கனையாகச் சிக்கிக்கொண்டேன். ஆனால் உம் தந்தையின் நல்லெண்ணத்தை நான் லவலேசமும் சந்தேகிக்க வில்லை. அதன்படி நான் நடந்தது பிசகோ என்று எண்ண ஆரம்பிக்கிறேன். உம் தந்தையே பாதுஷா தன்னிடம் வைத்திருக்கும் மதிப்பைப்பற்றி அதிகமாக எண்ணிக் கொண்டிருக்கலாம் அல்லவா?'

'குமார்ஜி, என் நண்பன் தாணாஜி சொன்னது சரி. ஜயசிங் யோசனையை நான் ஏற்றுக்கொண்டது தவறு என்றார். பாதுஷா தர்மா தர்மங்களுக்குக் கட்டுப்பட்டவராக இருந்தால் நாம் பயமின்றி தர்ம வழியைப் பின்பற்றலாம். ஆனால், தன் காரிய சித்தியில் கண்ணா யிருக்கும் பாதுஷாவுக்குத் தான் கையாளும் முறை ஏதுவாகயிருந் தாலும் கவலை கிடையாது. என்பது அவர் செய்கைகளில் ஆதியி லிருந்தே தெரிகிறது. அதை மறந்து நான் உம் தந்தையின் உயர்ந்த லட்சிய போதனையைப் பின்பற்றி விட்டேன்'.

'அதனால் ஒன்றும்கெடுதல் ஏற்படாது மகாராஜ். கவலைப்பட வேண்டாம்!'

'கெடுதல் ஏற்பட்டால் என்ன செய்யப் போகிறேன், ஒன்றுமில்லை, பவானியின் ஆக்ஞை என்று திருப்தி அடையப்போகிறேன். என் உயிருக்காக நான் யோசனை செய்யவில்லை, மகாராஷ்டிரம் இன்னும் உருவாக வில்லையே என்றுதான் கவலைப் படுகிறேன்'.

'பாதுஷா உங்களைக் கண்டு அஞ்சுகிறார். உங்களை ஒன்றும் செய்யத் துணியமாட்டார், நிச்சயம் என்ன செய்வது என்ற யோசனையில் தான் இருப்பார்'

'அவர் யோசனை முடியும் வரை காத்திருக்கும் ஆள் நானல்ல, ஆகையால் நான் என் யுத்தியைக் கையாண்டு இங்கிருந்து தப்ப முயல வேண்டும். நீங்கள் ஒன்று செய்ய வேண்டும், நான் தப்பிப்போவது உங்களுக்குத் தெரியவே வேண்டாம்'.

மகாராஜ் உங்கள் உத்தேசத்தை நீங்கள் என்னை நம்பி மனம் திறந்து என்னிடம் சொல்லி விட்டீர்கள். ஆகையால் இதில் நான் ஒன்றும் தயங்க இடமே இல்லை. உங்கள் இஷ்டம்போல செய்யுங்கள். ஆனால் ஜாக்கிரதை மறுபடி பாதுஷா கையில் அகப்பட்டுக்கொண்டீர்களோ, உங்கள் உயிருக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன். இப்பொழுதே என்மேல் சந்தேகம் ஏற்படும். ஆனாலும் பாதகமில்லை. என் தந்தை அனுப்பின மனிதரை பாதுஷா நடத்தும் வகைக்கு நீங்கள் தப்பிப் போனால் நான் சந்தோஷமே படுவேன்! ஆனால் மகாராஜ். நன்றாக யோசியுங்கள். முடியுமா உங்களால்? எவ்வளவு பாதுகாப்பு? புலத்கான் எம காதகன். அவனல்லவா உங்களைக் காவல் காக்கிறான்.

'எவனாகத்தான் இருக்கட்டும் அதைப்பற்றி நான் கவலைப்பட வில்லை. பவானியின் அருளால் இந்தப் பாதுஷாவின் கண்களில் மண் தூவ எனக்கு சாமர்த்தியமுண்டு. பாதுஷா உங்கள் தந்தை வார்த்தைக்கு மதிப்பு வைக்காததால் நான் தப்பிப்போவது உங்கள் தந்தைக்கும் இழுக்காகாது!'

'தான் நிரம்ப சாமர்த்திய சாலி என்று பாதுஷா நினைத்துக் கொண்டி ருக்கிறார். அவருக்கும் ஒரு அதிர்ச்சி கொடுக்கிறேன். நமஸ்காரம் குமார்ஜி நீங்கள் இனிமேல் இங்கே வராதீர்கள்!'

12. விமோசனம்

முற்றிலும் உருமாறி மாறுவேஷம் தரித்த சிவாஜியும் அவருடைய அந்தரங்கத் தோழன் நீரஜியும் இரண்டு குதிரைகளின் மேல் பூரி ஜகன்னாதை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

'நீங்கள் பாதுஷாவின் கூண்டிலிருந்து விடுபட்டு வந்தது பெரிய ஆச்சரியம் தான்!' என்று நீரஜி நூறாவது தடவையாகச் சொன்னார்.

'எல்லாம் பவானியின் கிருபை! பாதுஷா தன்னை மிஞ்சின சாமர்த்திய சாலி இல்லை என்று நினைத்தார் அவர் இன்று கதிகலங்கின வண்ணம் ஆலோசனை செய்து கொண்டிருப்பார்'

'ஆமாம், எப்படி வெளியேறினீர்கள்? எங்களையெல்லாம் முதலிலேயே போகச் சொல்லிவிட்டீர்களே, ஏன்?'

'பரிவாரங்கள் இருந்தால் நான் வெளியேறுவது கடினம், ஆகையால் தான் தந்திரமாக சந்தேகத்திற்கு இடமில்லாமல் உங்களை எல்லாம்

முதலில் போகச் சொன்னேன். பிறகு உடம்பு மிகவும் அசௌகரியம் என்றும், பிராமணர்களுக்கு பக்ஷிய வினியோகம் செய்ய வேண்டும் என்றும் பாசாங்கு செய்தேன். பிரதி தினமும் பெரிய பெரிய கூடைகள் நிறைய பக்ஷியங்களை என் விடுதியிலிருந்து ஆட்கள் தூக்கிக்கொண்டு வெளியே போகும் வழக்கத்தை ஏற்படுத்தினேன். முதலில் சில நாட்கள் காவலாளர்கள் கூடைகளை சோதனை போட்டார்கள். பிறகு சிரத்தை குறைய ஆரம்பித்தது. ஒருநாள் ஹிரஜியின் கையில் என் மோதிரத்தைப் போட்டு அது நன்றாகத் தெரியும்படி அவரைப் படுக்கையில் படுக்க வைத்துவிட்டு நான் ஒரு கூடையில் புகுந்துகொண்டேன். பல பக்ஷியக் கூடைகளுடன் நானும் சிறையிலிருந்து ஊருக்கு வெளியே வந்தேன். அங்கே முன் ஏற்பாட்டின்படி குதிரைகள் தயாராக இருந்தன. அவற்றில் ஏறி நேர்வழியாகப் போகாமல் நேர் கிழக்காக காசிக்கு வந்தேன். அங்கேதான் உன்னுடன் சேர்ந்துகொண்டேன்'.

'ஹிரஜி எப்படித் தப்பித்தார்?'

'அவன் சிறிது நேரத்திற்கெல்லாம் எழுந்திருந்து சாவதானமாக வெளியேறினான். அவனை ஒருவரும் தடுக்க மாட்டார்கள் அல்லவா?'

'காவலாளர்கள் உடனே கவனிக்கவில்லை போலிருக்கிறது!'

'சிறிது நேரத்திற்கெல்லாம் உள்ளே சத்தமே இல்லாதது கண்டு போய்ப் பார்த்திருப்பார்கள். உடனே புலத்கானுக்கு அறிவித்திருப்பார்கள். புலத்கான் பாதுஷாவிடம் ஓடி பட்சி பறந்துபோய்விட்டது என்று முறையிட்டிருப்பான்!'

'நமது முக்கியஸ்தர்கள் யாரும் அங்கே அகப்பட்டுக் கொள்ள வில்லையே!'

'இல்லை, பாவம் குமார் ராம்சிங்கின் மேல்தான் பாதுஷாவுக்கு சந்தேகம் ஏற்படும். அதை எதிர்பார்த்தே சில காலமாக அவரை என் ஜாகைக்கே வரவேண்டாமென்று தடுத்துவிட்டேன்'.

'ஜயசிங் கதி என்னவாகும்?'

'அவர் என்ன செய்வார்? பாதுஷாவுக்கு அவர்மேல் சந்தேகம் ஏற்படாது. நானே தான் தனியாக யோசனை செய்து தந்திரமாகத் தப்பித்தேன் என்பது பாதுஷாவுக்குத் தெரியும்... ஆகா, இப்பொழுது என் உள்ளம் குளிர்கிறது! என் ஆக்ரா பிரயாணமும் வீணல்ல'.

'எப்படி மகராஜ்?'

'பாதுஷாவுக்கு பெரிய அதிர்ச்சி ஏற்படுத்திவிட்டேன். நிலை குலைந்து போவார். இனிமேல் வாழ்நாள் முழுவதும் அவருக்கு நிம்மதியே இராது. என் உருவமும் என் சாகஸமும் அவர் மனதில் குடிகொண்டு சதா வாட்டி எடுக்கும். என்னை ஜயிக்க முடியாதோ என்ற பீதியே அவருக்கு ஏற்பட்டுவிடும். அதனாலேயே தயக்கமும் சோர்வும் ஏற்படும். மேலும்...'

'மேலும், மீளமாட்டேன் என்று எண்ணி மழுங்கிப் போகவிருந்த மகாராஷ்டிரம் நான் திரும்பினதும் சிலிர்த்தெழும். நாடெங்கும் புத்துணர்வும் உற்சாகமும் மூண்டெழும். அந்த எழுச்சியில் நான் அசாதாரணமான காரியங்களைச் செய்து முடிப்பேன். என் இடையூறு களையெல்லாம் சிறுமுட்கள் போல எடுத்தெறியவேன்!'

'ஜயசிங்?'

'ஜயசிங் இனிமேல் என் ஜோலிக்கு வரமாட்டார். அவருடைய எண்ணங்களும், ஆசைகளும் மண்ணாகிவிட்டன. பாதுஷா இனிமேல் அவரை ஒதுக்கி விடுவார். தக்ஷிணத்திலிருந்து ஜயசிங் போனால் மொகலாயர்கள் நமக்கு அங்கே ஒரு தீங்கும் இழைக்க முடியாது'.

'பீஜப்பூர்?'

'பீஜபூரா! பீஜபூர் எனக்கு எம்மாத்திரம் இனிமேல்? திலிர்கான் ஒருவர்தான் நான் சமாளிக்க வேண்டிய எதிரியாக இருப்பார். அவர் ஒருக்காலும் என்னை ஓங்கவிட மாட்டார். ஆனால் பவானியின் பலம் இருக்கும்பொழுது நான் யாருக்கு பயப்படவேண்டும்!'

'நீங்கள் ஆக்ராவிலிருந்து மீண்டு வந்தது யமபுரத்திலிருந்து மீண்டு வந்தது போலத்தான், சந்தேகமில்லை. நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது'.

'சரித்திரத்திலேயே இந்த மாதிரியான சிங்கத்தின் வாயிலிருந்து ஒரு அரசன் தப்பித்திருக்கமாட்டான். எனது பணி பிரத்யேகமானது, நான் செய்யப்போகும் வேலை புனிதமானது என்பதற்கு இதுவே அத்தாட்சி'.

'உங்களைச் சிறை வைத்திருந்ததில் பாதுஷாவின் அபிப்பிராயம் எதுவாக இருந்திருக்கலாம்?'

'அவருக்குத்தான் தெரியும் அது! ஒருவேளை கொஞ்சம் காலம் சிறை வைத்திருந்து அமளி அடங்கின பிறகு ஓசைப்படாமல் என்னைக் கொலை செய்துவிட உத்தேசித்திருக்கலாம். அல்லது நிரந்தரமாகவே என்னைக் கைதியாக வைத்துக்கொண்டு என் தேசத்துடன் பேரம்பேச நினைத்திருக்கலாம். இது எனக்கு மூன்றாவது கண்டம்'.

'முன் இரண்டு?'

'அப்ஸல்கான் கொல்ல முயன்றது முதல் கண்டம். ஜயசிங் பிரதாப கட்டைச் சூழ்ந்துகொண்டபோது நான் பரிவாரங்களுடன் சாகத் துணிந்தது இரண்டாவது. அதிலிருந்து ரகுநாத் பண்ட் என்னை மீட்டாரல்லவா?'

'ஆமாம்!'

'இனி எனக்கு ஒரு விதமான அரிஷ்டமும் கிடையாது. கூடிய சீக்கிரம் நாடு திரும்புவேன். ராஜ்யத்தை சீர்படுத்தி இழந்ததைத் திரும்பப் பெறுவேன். தாற்காலிகமாக மொகலாயர்களுடன் சமரஸம் செய்து கொண்டு பலத்தைச் சேகரம் செய்துகொண்டு மேலே எதிர்காலத்தில்

மகத்தான சத்துருவாக முளைக்கப் போகும் ஆங்கிலேயர்களை எதிர்க்க ஏற்பாடுகள் செய்வேன்!'

'சூரத் வியாபாரிகளா?'

'சூரத்தில் பண்டகசாலை வைத்துக்கொண்டு டில்லி சிம்மாசனத்தில் கண்வைத்திருக்கும் ஆங்கிலேயர்கள் தான் முஸல்மான்களுக்குப் பிறகு நமது தேசத்தின் தலைவிதியை, விதிக்கப் போகிறார்கள்!'

'பூரிக்குள் போகவேண்டுமா?'

'ஆமாம் ஜகந்நாதனை தரிசனம் செய்துகொண்டு மேலே போவோம்!'

13. சத்ரபதி

'சிவா, இன்று தானடா என்னுடைய உள்ளம் குளிர்ந்தது. நான் உன்னைப் பெற்றெடுத்ததன் பலன் சித்தித்து விட்டது'.

'தாயே, உன்னுடைய ஆசீர்வாதத்தாலும் ஊக்கத்தாலும் தானே அப்ஸெல் கானிடமிருந்து தப்பினது முதல் இன்று வரை, இந்தப் பதினான்கு வருஷங்களில்'-

'ஆமாமடா, ஸ்ரீ ராமனைப் போல பதினான்கு வருஷங்கள், பட்டாபிஷேகத்துக்கு முன் போர் புரிந்தாய்!'

'ஆகா, எத்தனை எதிரிகள்! எத்தனை சண்டைகள், எவ்வளவு ஆபத்துக்கள், அப்ஸல்கான், ஸாயிஸ்தாகான், ஜலசிங், திவர்கான் . தாவுக்கான், பகதூர்கான்-எல்லோரும் மகா பிரசித்திபெற்ற சுத்த வீரர்கள், எல்லோரும் மொகலாய சக்கரவர்த்தியின் பிரதம தளகர்த்தர்கள்'.

'நமது வீரர்கள் சக்தியில் குறைந்தவர்களா? மூரார்பாஜி, நேதாஜி, தானாஜி, பிரதாப ராவ், நிரஜி, சூரியஜி, மோரோ பண்ட்,-'

'அந்த சுத்த வீரர்களுக்குக்கெல்லாம் சிகரமாக எனக்கு ராஜ தந்திர முறையில் உதவி புரியும் ரகுநாத பண்ட்!'

'இருந்தபோதிலும் சாம்ராஜ்யாதிபதி அவுரங்கஜேப்பை இன்றுவரை நாம் சமாளித்து வருவது பவானியின் கிருபை தான்'

ஜீஜாபாயி பரம திருப்தியுடன் மகன் முகத்தைப் பார்த்துக்கொண்டு மேலும் மெய் மறந்து பேசலானார்.

'மகனே, நீ வாலிபனாக இருந்தபொழுது பூனா நகரத்து உப்பரிகையில் உட்கார்ந்துகொண்டு பவானியை இப்படித்தான் வேண்டுவேன்: 'தாயே, நான் பட்ட கஷ்டங்களுக்கு என் வயிற்றில் பிறந்தவன் புராண புருஷர்களைப் போல வீரச் செயல்கள் புரிந்து நாட்டின் நலத்துக்காக வாழ வேண்டும்'. பவானி என் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டாள்; ஆனால் சிவா, உனக்குப் பல சோதனைகள் இட்டாள். பலபரீட்சைகள்

செய்தாள். நீ ஒன்றிலும் சோர்வு பெறவில்லை. கடைசியாக ஸ்வாமி ராமதாஸர் அனுக்ரகத்தாலும் பெரியோர்கள் ஆசிர்வாதத்தாலும் நீ சத்ரபதி ஆகப் போகிறாய்-என் ஜீவியத்தின் ஆசை அது தானடா!'

'ரகுநாத பண்டிதர் எல்லா இடையூறுகளையும் சமாளித்து மகாபண்டிதரான சகபட்டருடைய அனுமதியையும் பெற்றுவிட்டார். அவர் என்னை க்ஷத்திரியன் என்று ஏற்க லேசில் சம்மதிக்க வில்லை. கடைசியாக எனக்கு முடிசூட்டத் தானே வருவதாக ஒப்புக்கொண்டு விட்டார்!' என்றார் சிவாஜி.

'உனது ராஜ்யம் இப்பொழுது எவ்வளவு தூரம் பரவி இருக்கிறது?' என்று ஜீஜா கேட்டாள்.

'உனக்குத் தெரியாதா அம்மா, என்ன வேடிக்கை!' என்று சிவாஜி சிரித்தார்.

'இது வரையில் நான் அதை யாரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. உன் வாயாலேயே அறியக் காத்துக் கொண்டிருந்தேன்!' என்று தாயார் மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

'வடக்கே சூரத்துக்கருகிலுள்ள ராமநகரத்திலிருந்து தெற்கே கங்காவதி நதிக்கரை வரையிலும்; கிழக்கே பகிலானா நாஸிக், பூனா, சதாரா, கோலாப்பூர், எல்லாம் மகாராஷ்டிர ராஜியத்தில் சேர்ந்தவை; மேற்கே கடல், மலை'.

'இது விரியுமா?'

'பவானியின் கிருபையிருந்து நானும் இன்னும் பதினைந்து வருஷகாலம் உயிருடன் இருந்தேனானால் தக்ஷிணம் முழுவதையுமே மகாராஷ்டிர மாக்கி விடுவேன்!'

'பிறகு?' என்று ஜீஜா ஆவலுடன் கேட்டாள்.

'பிறகா? அதற்கு மேலும் தேசத்தை ஒன்றாக்கும் சக்தி எனக்கு இருக்குமோ என்னமோ! ஆனால் நான் சளைத்தாலும் என் உடல் களைத்தாலும் ஹிந்து ஜாதி சலிக்காது! அது தலையெடுத்துவிட்டது. விபரீதமான சக்திகள் முளைத்து எதிர்ப்பட்டாலொழிய நமது ஜாதி இனிமேல் வீழ்ச்சி அடைய நியாயமில்லை ஆனால்' என்ன, சிவாஜி?' என்று ஜீஜாபாயி கவலையுடன் கேட்டாள்.

'மேற்கேயிருந்து மேகமொன்று பரந்து வருகிறது. அதன் சக்தி எவ்விதம் நம்மைப்பாதிக்கப் போகிறதோ தெரியவில்லை. ஆனால் மொகலாயர்கள் இனி தலையெடுக்க முடியாது. அவ்வாறு இப்பொழுதே, நானே முகம்மதியர்களுடைய சக்தியைக் குலைத்து விட்டேன்'.

'முகம்மதியர்கள் சில நூற்றாண்டுகளாக இந்நாட்டிலேயே இருந்து ஒருவிதமாக நம்மவர்கள் போலவே ஆகிவிட்டார்கள். நீ சொல்வது போல மேற்கத்தியர்கள் ஆதிக்கம் இங்கே வலுப்பதாக ஏற்பட்டால் அது

இன்னும் ஆபத்தாயிற்றே! அப்படியானால் மொகலாயர்கள் பலிஷ்டர்களாக இருப்பதே மேலாகுமே! என்றாள் ஜீஜாபாயி.

'அம்மா, நீ சொல்வது ஒரு விதத்தில் உண்மையோ என்று கூட எனக்குத் தோன்றுகிறது. ஆனால் மகாராஷ்டிரர்கள் ஏன் நாடு முழுவதையும் ஒரு அதிகாரத்தின் கீழ்கொண்டு வர முடியாது? எனக்கு ஆயுள் இருந்தால் செய்து விடுவேன்!'

'மேற்கத்தியர்கள் இங்கே நிலை கொள்ளாதபடி இப்பொழுதே முளையிலேயே, ஏன் கிள்ளி விடக்கூடாது?'

'மொகலாய சக்கரவர்த்திகள் முன் யோசனையின்றி அவர்களுக்கு இடம் கொடுத்து விட்டார்கள். அவர்களும், தங்கள் தேசத்து மன்னர்களின் பலத்துடன் இங்கே பீரங்கி, துப்பாக்கி சமேதர்களாக வியாபாரத்தை நடத்துகிறார்கள். வியாபாரம் வளரவளர நாடுபிடிக்கும் இயக்கமாக மாறுகிறது. அவர்களை சிறிது எதிர்த்துப் பார்த்தேன். பரீட்சார்த்தமாக, சூரத்தில், இப்பொழுது முடியவில்லை. போகப் போகப் பார்க்க வேண்டும்'! என்றார் சிவாஜி.

'சத்ரபதி ஆவதுடன் திருப்தி கொள்ளாதே, என் காலமானாலும் சொல்லி வைக்கிறேன். பாரத நாடு ஒன்றாக வேண்டுமென்ற லட்சியத்தை மறக்காதே!' என்று ஜீஜாபாயி சொன்னாள்.

14. பட்டாபிஷேகம்

காகா பட்டர் என்ற விசுவேசுவரர் அந்தக் காலத்தில் பாரத தேச முழுவதும் பிரசித்தியும் செல்வாக்கும்பெற்ற வடமொழிப் பண்டிதர், நாலு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள். ஆகம புராணங்கள் யாவற்றிலும் கரை கண்டவர், அவர் வாக்கால் சிவாஜி உதயபுரத்து ராஜபுத்திரர்கள், மரபில் தோன்றின க்ஷத்திரியன் தான் என்று ஒப்புக்கொண்டார். பட்டாபிஷேக சமயத்தில் வந்திருந்து தானே அபிஷேகம் செய்து வைப்பதாகவும் ஒப்புக்கொண்டார். அவர் ராஜகிருஹத்துக்கு வரும்போது சிவாஜியே பிரமுகர்களுடன் பலமைல் தூரம் எதிர்கொண்டு சென்று வரவேற்றார்.

அபிஷேக ஏற்பாடுகள் பலமாதங்கள் நடைபெற்றன. தேசத்தின் பல பாகங்களிலிருக்கும் பிரபல பண்டிதர்களுக்கெல்லாம் அழைப்புகள் அனுப்பப்பட்டன. பதினோராயிரம் பிராமணர்கள் கூடினார்கள். அவர்களுக்கெல்லாம் விடுதி சாப்பாட்டு வசதிகள் வெகு ஏற்பாடாகச் செய்யப்பட்டிருந்தன.

சிவாஜி முதலில் தன் குரு ராமதாஸ் சுவாமியையும் தாயாரையும் வணங்கிவிட்டு புண்ய க்ஷேத்திரங்களை தரிசித்தார். பிறகு பிரதா

பகிருஹத்திலமர்ந்த பவானியை தரிசனம் செய்தார்.

பிறகு காகாபட்டர் அவருக்கு சாஸ்திரோக்தமாக உபநயனம் நடத்தி மந்திரங்களை உபதேசம் செய்தார். அதனால் சிவாஜி சாஸ்திரப்படி சுத்தக்ஷத்திரியனாகி விட்டார். அதற்கு பிறகு தனது ஜீவியகாலத்தில் செய்த பாவங்கள் நிவர்த்தியாவதற்காக துலாபாரம் என்ற முறைப்படி தன் எடைக்குச் சரியாக நாணயங்களையும், சப்தலோ ஹங்களையும் கற்பூரம் உப்பு, வாசனை திரவியங்கள் முதலியவற்றையும் நிறுத்துதானம் செய்தார்.

*1674*ஆம் வருஷம் ஜுன் மாதம் 6ஆம் தேதி பட்டாபிஷேகம் முதல் நாள் சிவாஜி கங்கையின் புண்ணிய ஜலத்தில் ஸ்னானம் செய்து காகபட்டர் முதலிய பெரியோர்களுக்கு தானம் வழங்கி உபவாசமிருந்தார்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து மங்களஸ்னானம் செய்து இஷ்ட தேவதைகளுக்குப் பூஜை செய்துவிட்டு குருவான காகாபட்டரையும் பூஜித்தார். துல்லியமான வெண்பட்டுடுத்து ஆபரணங்களும் திவ்விய மான மலைகளும் அணிந்து அபிஷேகத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த இடத்திற்குப் போனார். தங்கத்தகடு போட்டு இரண்டடி உயரம் அகலம் நீளமுள்ள ஆசனத்தில் அமர்ந்தார். பட்ட மகிஷி ஸாய்ராபாயி இடது பக்கம் அமர்ந்தாள். அவருடைய அங்கவஸ்திரத்தின் தலைப்பையும் ராணியினுடைய புடவையின் தலைப்பையும் சேர்த்து முடிபோடப் பட்டிருந்தது. இளவரசன் சாம்புஜி அருகில் இருந்தான் எட்டு திக்கு களிலும் புண்ணிய தீர்த்தங்களிலிருந்து தருவிக்கப்பட்ட தண்ணீர்க் கலசங்களை ஏந்தி எட்டு பிரதானிகளும் நின்றார்கள். வேதகோஷமும் கீத வாத்தியகோஷமும் முழங்க அவர்கள் சிவாஜிக்கு அபிஷேகம் செய்தார்கள். பஞ்சமுக தீபங்களை ஏந்திய பதினாலு சுமங்கலிகள் மங்கள ஆரதி செய்தார்கள்.

பிறகு சிவாஜி புத்தாடை அணிந்தார். வெகு பகட்டாக சரிகை வேலை செய்து சிவப்புப் பட்டாடை அணிந்து, விலையுயர்ந்த ஆபரணங்களும் மாலைகளும் பூண்டு, முத்துக்கள் மயமான தலைப்பாகையை அணிந்தார். பிறகு தன் கத்தியையும் வில் அம்புகளையும் வணங்கினார். குறித்த சுப முகூர்த்தத்தில் சிம்மாசனம் அமைந்திருந்த மண்டபத்தில் நுழைந்தார்.

அந்த மகாமண்டபம் சாஸ்திரப்படியும் ஆசாரப்படியும் அமைந் திருந்தது. முத்துக்கள் சரம்சரமாகத் தொங்கின. அஸ்மானகிரி மேலே கட்டப்பட்டிருந்தது கீழே வெல்வெட் பரப்பி இருந்தது. பலமாதங்கள் பல பொற்கொத்தர்கள் வேலை செய்து நிர்மாணம் செய்த சிம்மாசனம் *14* லக்ஷம்ரூபாய் விலை மதிப்புள்ள *32* மணங்கு தங்கத்தால் ஆனது என்று சபாசதர் என்பவர் கூறுகிறார். அதனுடைய எட்டு தூண்களும் ஆஸனமும் தங்கத்தகடு பரவினவை. தூண்களில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தன. ஏராளமாக முத்துமாலைகள் தொங்கவிட்டிருந்தன.

ஆஸனத்தில் கீழே புலித்தோலும் மேலே வெல்வெட்டும் விரிக்கப் பட்டிருந்தன. சிம்மாஸனத்தில் வலது பக்கம் இரண்டு தங்க யாளி முகங்கள்; இடது பக்கம் சாமரங்கள். சமஎடையாக நின்ற தங்கத் தராசும் நீதிக்கு அடையாளமாக விளங்கிற்று.

அரண்மனை வாசலில் தோரணங்களும் மாவிலைக் கலசங்களும் யானை குதிரைகளும் அலங்கரிக்கப்பட்டுநின்றன. சிவாஜி சிம்மா சனத்தில் அமர்ந்தபொழுது நவரத்தினங்கள் பதித்த தங்கத்தாமரை மலர்கள் சபையில் தூவப்பட்டன. மறுபடி பதினாறு சுமங்கலிகள் மங்கள ஆரதி செய்தார்கள்.

கூடியிருந்த பிராமணர்கள் உச்சஸ்தாயியில் வேத மந்திரங்களை கோஷித்தார்கள், 'ஜய ஜய சிவாஜி மகாராஜ்' என்று கூட்டம் கோஷித்தது. சகல வாத்தியங்களும் முழங்கின. முன் ஏற்பாட்டின்படி நாட்டிலுள்ள கோட்டைகளில் அதே முகூர்த்தத்தில் அதிர்வெடிகள் விடப்பட்டன. ராஜ புரோஹிதர் காகா பட்டர் பட்டுக்குடையை சிவாஜியின் சிரசிற்கு மேல் பிடித்து 'சத்ரபதி!' என்று ஆசிர்வதித்தார்.

உடனே பிராமணர்கள் சத்ரபதியை வாழ்த்துகிறார்கள். பதினாலு விதமான மகாதானங்களை செய்துவிட்டு சிவாஜி மந்திரிகளின் மரியாதைகளை ஏற்றார். உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் வடமொழிப் பட்டப்பெயர்கள் வழங்கப்பட்டன.

சிம்மாசனத்திற்குச் சற்று தாழ்ந்த ஆசனத்தில் குரு காகா பட்டர், பிரதம மந்திரி, மோரோதிரியம்பகல், இளவரசன் சாம்புஜி மூவரும் அமர்ந்திருந்தார்கள் மற்ற மந்திரிகள் வரிசையாக சிம்மாசனத்தின் இருபுறமும் நின்றார்கள்.

எட்டு மணிக்கு ஆங்கில தூதர் ஹென்ரி ஆக்ஸின்டன் மகாராஜாவைக் காண வந்தார். வைர மோதிர மொன்றைப் பரிசாக அளித்தார். சிவாஜி யும் அவருக்கு பதில் மரியாதை செய்து அனுப்பினார்.

பிறகு ஊர்வலம் பட்டத்து யானைமீதேறி சகல பிருதுகளுடனும் நகர வீதிகளைச் சுற்றி வந்தார். வீதிகளும் வீடுகளும் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. பெண்கள் ஆரதி எடுத்து மங்களகரமான மலர்களையும் லாஜத்தையும் அவர் மேல் தூவினார்கள், ஆலய தரிசனம் செய்துவிட்டு சிவாஜி மாளிகைக்குத் திரும்பினார்.

சிவாஜி மகாராஜாவான தினம் சரித்திரப் பிரசித்திப்பெற்ற தினமாயிற்று.

15. வாக்குத்தத்தம்

'சத்ரபதி!' என்று படுக்க படுக்கையிலிருந்து மெல்லிய குரலில் கூப்பிட்டாள் ஜீஜாபாய்.

கால்மாட்டிலேயே உட்கார்ந்திருந்த சிவாஜி குனிந்து 'அம்மா, என்ன அப்படிக் கூப்பிடுகிறாய். உனக்கு நான் எப்பொழுதும் உன் மகன் சிவாஜி தானே!' என்று தூக்கம் தோய்ந்த குரலில் சொன்னார் சிவாஜி.

'இல்லையடா அந்தப் பெயர் சொல்லிக் கூப்பிடவேண்டுமென்று தானடா இத்தனை நாள் உயிர் வைத்துக்கொண்டிருந்தேன். நீ சத்ரபதி யாகி ராஜ்ய பரிபாலனம் செய்து பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்ற உறுதியில் தான் என் பிராணன் இந்த உடலில் தங்கிற்று. இனி நான் இருக்க மாட்டேன்; இனிமேல் என் நெஞ்சு வேகும். ஆனால்-'

'ஆனால் என்ன அம்மா?'

'ஒன்றுமில்லை, நீ அப்படித்தான் இருப்பாய், நிச்சயம். இருந்தாலும் கடைசியாக உன் வாயிலிருந்தே எனக்கு அந்த வாக்குத்தத்தம் வேண்டும்'.

'எதற்கு?'

'நீ சத்ரபதியானது மகத்தான விஷயம். உன்னைப் பெற்றது முதல் நான் கண்ட கனவு பலித்தது? எனக்கு என்ன ஆனந்தம் என்று சொல்லத் தெரியவில்லை. அதற்கு மேலும் உனக்கு வேலை இருக்கிறது. ராஜ்ய சுகத்திலும் அதிகார மிதப்பிலும் நீ அதை மறந்துவிடக்கூடாது'.

'சொல் அம்மா உன் உத்தரவை!'

'உன் ராஜ்யத்திற்கும், நமது தேச தர்மத்தை அனுசரிக்கும் மக்களுக்கும் நீ ஆற்ற வேண்டிய தொண்டை ஒரு நாளும் நீ மறக்கக்கூடாது'.

'பாவானியின் கிருபையாலும் உன் சாமர்த்தியத்தின் மூலமாக அவள் காட்டின சக்தியாலும் நீ உருவாக்கின-அல்ல-உருவாகிய-இந்த ராஜ்யத்தை முதலில் பலப்படுத்து. செங்கோல் முறையை செவ்வனே ஸ்தாபித்து நடை முதலுக்குக் கொண்டுவா!'

'செய்கிறேன். அம்மா!'

'பிறகு-உன் பலத்தைக் குலைக்க முயலும் எதிரிகளை ஒவ்வொரு வராக எதிர்த்து அடக்கு. ராஜதந்திர முறையைக் கையாண்டு அவர் களைப் பிரித்துப் போராடு. ஒன்றுசேர விடாதே! அதர்ம யுத்தத்தில் ஈடுபடாதே. மக்களை சிரமத்துக்கு உள்ளாக்காதே. உன் சகாக்களிடமும் உத்தியோஸ்தர்களிடம் மதிப்புவை. மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு. ஒரு காலும் அவர்களை மனம் புண்பட வார்த்தை சொல்லாதே. இது மிகவும் முக்கியம். வார்த்தை பொல்லாதது. முன்கோபத்திற்கோ உணர்ச்சிப் பெருக்குக்கோ அவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் இடம் கொடுக்காதே! அவர்கள் உழைப்பது தேச நலத்திற்காகத்தான். உன்னுடைய சுக சௌகரியங்களுக்கல்ல என்பதை இடைவிடாமல் அவர்கள் உணரும்படி நடந்து கொள்!'

'நீ இன்னும் சிறிது காலம்-'

'இல்லை. அப்பா, இனிமேல் தாங்காது; ஆதியில் சீதையைப் போலவே, ஒரு பெண்ணுக்கேற்படாத கஷ்டத்தை அனுபவித்தேன்.

நாட்டைக் கட்டியாள்பவனைப் பெற்றதால் ஏற்பட்டது என்ற தேர்ச்சியுடன் சகித்தேன். பிறகு உன்வெற்றிகளை அனுபவித்துப் பரவசமானேன். நீ சிம்மாசனத்தில் அமர்ந்தும் பார்த்துவிட்டேன். அவ்வளவு சுகத்தையும் துக்கத்தையும் தான் எந்த உடலும் பொறுக்கும். இனிமேல் நீ செய்வதெல்லாம்'.

'நீ எப்பொழுதும் என் உள்ளத்தில் இருந்து என்னைத் தூண்டுவாய்!'

'நீ சொல்வது உண்மையாகட்டும் உன் உள்ளத்தில் எது செய்தால் சரி என்று அந்தரங்க சுத்தியாகப் படுகிறதோ அதைச் செய்- அது தர்மமாகத் தான் இருக்கும். அதுதான் அப்பா என் அந்நிய காலக் கோரிக்கை!'

'இன்னும் என்ன தாயே!'

'பகைவர்களிடம் அருள்கொண்டு நட. அது தர்மம் மட்டுமல்ல; ராஜ தந்திரம்கூட. எதிலும் அனாவசியமான கடுமையைக் காட்டாதே. காளிதாசன் ரகுவம்சத்தில் ராஜ ரீதியை அழகாகவும் சுருக்கமாகவும் சொல்லி இருக்கிறார். அதைத் தவறாமல் கடைப்பிடி. அடிக்கடி உனக்குச் சொல்லியிருக்கிறேன் கடைசித் தடவையாகவும் சொல்லுகிறேன்'.

ஸோஹேம் ஆஜன்ம சுத்தானாம் ஆபலோதய கர்மணாம்
யதா பராததண்டானாம் யதா க்லப்ரபோதினாம்
த்யாகாய ஸம்ப்ருதார்த்தானாம் ஸ்த்யாயமித பாஷிணாம்
யசஸே விஜிகீஷூணாம் ப்ரஜாயை க்ருஹமேதினாம்
ஆகார ஸதிருசப்ளக்ஞ: ப்ரக்ஞய ஸதிருசாகம:
ஆகமை: ஸதிருசாரம்ப: ஆரம்ப:ஸதிருகோதய:
கடைசியாக:
ப்ராஜானாம் வினயாதானாக் ரக்ஷணாத் பரனாதபி
ஸ:பிதா பிதரஸ் தாஸம் கேவலம் ஜன்ம் ஹேதவ:*

என்ற வாக்குப்படி நடந்துகொள்ள வேண்டும், சிவாஜி!'

'அந்த கோ கவியின் வாக்கு என் மனத்தில் பதிந்து கிடக்கிறது. ஏன் ஒவ்வொரு சொல்லும் செயலும் வெளிவரும் பொழுது அந்த நினைப்பிலேயே தான் வருகிறது. ரகுவம்சத்து மகா புருஷர்கள் கடைப்பிடிக்க தர்மத்தை நானும் காளிதா சன் சொல்வது போலவே வைரத்தில் வைர ஊசி துலைத்த துவாரத்தில் நூலும் நுழைவது போல கடைப்பிடிக்கிறேன். உன் அனுக்கிரகமும் பவானியின் அருளும் இருந்தால் நான் என்னதான் செய்யமாட்டேன்?'

* பிறவி முதலே மனோ வாக்கு காயங்களில் சுத்தர்கள்; பலன் தென்படும் வரை எடுத்த காரியத்தைக் கைவிடாதவர்கள்; தியாகம் செய்யும் பொருட்டே பொருள் ஈட்டுபவர்கள்; சொல் தவறாதிருப்பதற்கே மிதமாகப் பேசுகிறவர்கள். குற்றத்திற்கேற்ற தண்டனை விதிப்பவர்கள்; காலத்திற்கேற்ற அறிவு உடையவர்கள்; அவர்கள் தாம் உண்மையில் பிரஜைகளுக்கு பிதாக்கள்; அவரவர் பிதாக்கள் பெற்றோர் தாம்.

'காலத்தின் போக்கில் இந்த நாட்டில் க்ஷீணித்துப்போய் விட்ட தர்மத்தை தலைதூக்கும்படி செய்: கலைப்போக்கை அனுசரித்த முறையில் அதை பெரியோர்களான மந்திரிகள் மூலமும் படித்தவர்கள் மூலமும் புதுவகையில் வகுத்து அனுஷ்டானத்திற்குக் கொண்டுவா! இன்னும் நான் என்ன சொல்லப்போகிறேன். சொல்லவேண்டியது சொல்லியாகிவிட்டது போலவே தெரிகிறது... ஆ, என் பிராணன் சுலபமாக இப்பொழுது வெளியேறப் பிரயத்தினம் செய்கிறது போல் இருக்கிறது. சரி, சீக்கிரம் நீயும் உன் பத்னியும் எனக்கு காயசுத்தி செய்யுங்கள்! குரு ராமதாஸருக்கு என்னுடைய சாஸ்யபாவத்தைத் தெரிவி. சீக்கிரம்; புரோகிதர் வந்துவிட்டாரா?'

'அம்மா,காகாபட்டரே தயாராக இருக்கிறார். அவரே பிராயச்சித்தம் செய்து வைப்பார்!

'எனது லட்சியம் நிறைவேறிவிட்டது. பவானி, உன் கிருபை-நான் கிருதார்த்தை!' என்றாள் ஜீஜாபாய் கடைசியாக.